பஞ்சதந்திரக் கதை

முதலாவது—மித்திரபேதம்

(படங்களோடும் முன்னுரையோடுங் கூடியது)

இது

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

பார்வையிடப்பெற்று,

அவரால் எழுதப்பெற்ற அரும்பதவுரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

1923

விலை அணு 5.]

[காபி ரைட்.

பொருளடக்

I. முன்னுரை

1. வித்துவான் தாண்டவராய மு ... ம்.
2. பஞ்சதந்திரத்தைப் பற்றிய ...

II. பஞ்சதந்திரக் கதை வரலாறு

III. மித்திரபேதம்

சிங்கத்திற்கும் எருதிற் ... யை நரி கெடுத்து
எருதைக் கொல்வி ...

1. சஞ்சீவகன் என்னும் ... ல் காட்டில் விடப்படுதல்.
2. சஞ்சீவகனது முக்கார ... நட்டுச் சிங்கம் அஞ்சுதலும், காடகன் ... நரிகள் அதைக்கண்டு தமக்குள் பேசிக் ...
   க. குரங்கு மாத் ... ஆப்பைப்பிடுங்கி உடல் நசுங்கின ...
   உ. நரியும் பேரிகை
3. தமனகன் சிங்கத்தி ... று அதனை உறவாக்கிக் கொள்ளுதல்.
4. சஞ்சீவகன் தமனக ... ன் நட்பைப்பெறுதல்.
5. சிங்கத்திற்குச் சஞ் ... ல் நட்பு மிகுந்திருப்பதைக் கண்டு தமனக ... என்னும் நரிகள் தமக்குட் பேசிக்கொள்ளு ...
   ௩. தேவசன்மா ... ந்நியாசியை ஆஷாடபூதி ஏமாற்றி ...
   ச. ஒருகாகம் ... பால் பாம்பைக் கொன்ற கதை
   i. நண்டு ... தால் கொக்கைக் கொன்ற கதை

முன்னுரை

—உ—

... ன் - தாண்டவராய முதலியார் சரித்திரம்

... தாண்டவராய முதலியார் செங்கற்பட்டு
ல்லெ ... வில்லியாககம் என்கிற வில்லிநல்லூரில்
வே... யிற் பிறந்தவர். இவரது தந்தையார் கந்தசாமி
மு... தமையனார் முனியப்ப முதலியார். இரத்தின
... தலியாரும், கிறிஸ்தவக் கலாசாலையில் தமிழ்ப்
... யிருந்த பரமசிவன் பிள்ளையும் இவர் புத்திரர்கள்.
... து இளமையிலேயே இவர் தந்தையார் இறந்ததால்
... ரப் பொன்விளைந்த களத்தூரிலிருந்த இவரது அம்
... குமாரசாமி முதலியார் வளர்த்துவந்தார். அம்மானி
... ன் இவர் நெடுங்கணக்கும் எண்சுவடியும் படித்தார்.
... பிறகு தமிழ் கற்க ஆவலதிகரிக்க முதலியார் அந்தகக்
... ரராகவ முதலியார் சந்ததியாரான வேலப்ப தேசிக
... இலக்கணமும் இலக்கியமும் வாசித்தார். சிறிதுகாலம்
... ங்கழியப் பின்பு சென்னையைச் சேர்ந்து, புதுவை-விசுவ
... பிள்ளை, கூனிமேடு-வித்துவான் இராமாநுஜ முதலியார்,
... ப்பியம் வரதப்பமுதலியார், அருணாசலக்கவிராய
... பினரான சீர்காழி-வடுகநாதத் தம்பிரான் முதலிய
... களிடம் பாடங்கேட்டுத் தேர்ச்சி பெற்றார்.
... லும், இவர் தமிழ் கற்றதுடன் களித்திராமல் சம்ஸ்
... தெலுங்கு, கன்னடம், உருது, மஹாராஷ்டிரம்

(காகம் சொர்ணமாலையால் பாம்பைக்கொன்ற கதையின் தொடர்ச்சி.)

௫. முயல் தன் அறிவின்திறத்தால் சிங்கத்தைக் கொன்ற கதை.

6. தமனகன் சிங்கத்திற்கும் சஞ்சீவகன் என்னும் எருதிற்கும் பகை யுண்டாக்கல்.

௬. சீலைப்பேன் மூட்டைப்பூச்சிக்கு இடங்கொடுத்து இறந்த கதை.

௭. ஓர் ஒட்டையைக் காகம் முதலியவை கூடிக் கொன்ற கதை.

௮. சமுத்திரம் சிட்டுக்குருவியினால் அவமான மடைந்த கதை.

ii. ஆமை தன் மூடத்தனத்தினால் கழியை விட்டிறந்த கதை.

iii. மூன்று மீன்களின் கதை.

(சமுத்திரம் சிட்டுக்குருவியினால் அவமான மடைந்த கதையின் தொடர்ச்சி.)

7. சஞ்சீவகனும் சிங்கமும் போர்செய்தல்.

௯. கொக்குக் குரங்குக் குபதேசம்பண்ணி இறந்த கதை.

௰. துஷ்டபுத்தி தன் தீச்செயலால் நாசம் அடைந்த கதை.

iv. ஒரு கொக்குத் தன் மூடச்செயலால் நாசமடைந்த கதை.

(துஷ்ட புத்தியின் கதைத் தொடர்ச்சி.)

௧௧. தேவதத்தன் தான் கொடுத்த இரும்புக் கம்பிகளை இல்லை என்ற நண்பனை உபாயத்தால் வென்ற கதை.

8. சிங்கம் சஞ்சீவகனைக் கொன்றுவிட்டு வருத்தமாயிருத்தலும் தமனகன் அதற்குத் தேறுதல் கூறுதலும்.

IV. அரும்பத உரை

ஆங்கிலம் ஆகிய பிறபாஷைகளையும் கற்றார். இவரது பாண்டித்தியத்தை அறிந்து துரைத்தனத்தார் நன்கு மதித்து இவரைச் சென்னைத் துரைத்தனக்கலாசாலையில் தமிழ்ப் புலவராக நியமித்தார்கள்.

சிறிது காலத்துக்குப்பின் அக்கலாசாலை எடுபட்டுப்போக, கி. பி. 1843-ல் செங்கற்பட்டுச் சுதேச நீதிபதி உத்தியோகத்தை வகித்தார்.

இவர் காலகதி யடைந்த வருஷம் கி. பி. 1850-என்ப.

இவருடனிருந்த புலவர்கள்:—இராமசந்திரக் கவிராயர், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், போரூர் உபாத்தியாயர்.

இவர் சதுரகராதியின் முதன் மூன்று பகுதிகளையும் சூடாமணி நிகண்டின் முதற்பகுதியையும், திவாகரத்தின் முதலெட்டுத் தொகுதிகளையும், திருக்குறளையும், நாலடியாரையும் திருத்திப் பதிப்பித்தார்.

திருத்தணிகைமாலை, திருப்போரூர்ப்பதிகம், இலக்கண விஞவிடை என்பன இவர் இயற்றிய வேறு நூல்கள்.

கனம் பொருந்திய ரீச்சர்ட் க்ளார்க் துரையவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிப் பஞ்ச தந்திரத்தை மஹாராஷ்டிர பாஷையிலிருந்து மொழிபெயர்த்தார; கதாமஞ்சரி என்ற சிறுநூலைத் தொகுத்தார்.

இவர்காலத்தில், கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் மதச்சார்பாக விவகாரங்களும் வாதங்களும் நடந்துகொண்டிருந்தன. இருமதத்தினரும் துண்டுப்பத்திரிகைகளைப் பிரசுரித்தார்கள். புரசை-பொன்னம்பல சுவாமிகள் 'பைபிள்' நூலைக் கண்டித்து 'வேதவிகற்பம்' என்று ஒரு நூலை வெளியிட்டார்.

இதற்குக் கண்டனம் எழுதப் பாதிரிமார்கள் முதலியோரை வேண்டிக்கொள்ள, இவர் 'வேதவிகற்ப திக்காரம்' என்னும் நூலை இயற்றிக்கொடுத்தார். இப்புத்தகம் முத்துசாமி பிள்ளை என்ற புனைபெயருடன் பிரசுரமாகியது.

இவர், காலேஜ்-தாண்டவராய வாத்தியார் என்றும், முனிஷி-தாண்டவராயரென்றும், ஜட்ஜ்-தாண்டவராய முதலியாரென்றும் வழங்கப்படுவார்.

மரபால் சைவரேனும் மதப்பற்றின்றி உலகத்திற்கு முதற்காரணமான ஏகபிரமத்தையே தியானிப்பவர் என்பது இலக்கண வினாவிடையில், இவர்

"இலக்கண மின்ன திலைதல யார்க்கும்
அளக்க வொண்ணா ததனடி பரவுதும்"

எனப்பொதுப்படக் கடவுள் வணக்கம் கூறியிருத்தலால் அறியப்படும்.

இவரை அறிந்த பெரியோர்கள் இவர் அதிக சாதுவானவரென்றும், மெத்த சூக்ஷும புத்தியுடையவரென்றும் தொல்காப்பிய முதலிய இலக்கண ஆராய்ச்சியோடு இராமாயணாதி பாரகாவியங்களை நன்கறிந்தவர் என்றும் கூறுகின்றார்கள்.

2. பஞ்சதந்திரத்தைப் பற்றிய விமரிசனம்.

க. பஞ்சதந்திரத்தின் சரித்திரம்

பஞ்சதந்திரக்கதைகள் நெடுநாளாகப் பரதகண்டத்தில் வியாபகமாயிருந்து பின்னரே தற்காலத்தில் காணப்படுகிற வண்ணம் அழகான வசன நூலாகச் சம்ஸ்கிருதத்தில் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமெனத் தோற்றுகிறது.

கி. பி. 531-572-ம் ஆண்டுகளில் அரசு புரிந்த நூஷிர்வான் என்னும் பாரஸீக அரசன் காலத்து இவ்வினிய நூல் பாரஸீக பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இதனால் 6-ம் நூற்றாண்டிற்கு முன்னமே சம்ஸ்கிருத பஞ்சதந்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது. பாரஸீகத்திலிருந்து அரபியர் அதைத் தம் பாஷையில் மொழிபெயர்க்கலாயினர். அரபிப் பாஷையிலிருந்ததை ஜிமியன் சேட் என்பவர் 1080-ம் ஆண்டில் கிரீக்பாஷையில் மொழிபெயர்த்தனர். 1215-ம் வருஷத்தில் அரபிப் பாஷையினின்றும் ஸ்பானியர்கள் மொழிபெயர்த்தார்கள். 15-ம் நூற்றாண்டில் முதல் முதல் இக்கதைகள் ஜாமன பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. அக்காலந் தொடங்கியே ஏனைய ஐரோப்பிய பாஷைகள் பலவற்றினும் மொழிபெயர்க்கப்படலாயின. இவைகள் பில்பே கட்டுக்கதைகள் என்ற பெயருடன் வழங்கலாயின.

ஓர் ஆரியன் தன் தேசத்தின்கண்ணே பரம்பரையாக உலாவி வந்த கதைகளை ஒருபிரபந்தமாகச் சம்ஸ்கிருத பாஷையிலியற்ற, அது உலகத்திலுள்ள சிறார்களெல்லாம் படித்துக் களித்துப் பொழுது போக்கும்படியாக வாய்த்தது. காலக்கிரமத்தில் இவ்வரிய நூல் நம்நாட்டுப் பாஷைகளிலெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டது. சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்த நம் தமிழ்ப் பஞ்சதந்திரமோ நேரில் சம்ஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்க்கப்படாமல் மஹாராஷ்டிர பாஷையினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது. ஆகையால் தமிழ்ப் பஞ்சதந்திரத்துக்கும் சம்ஸ்கிருத பஞ்சதந்திரத்துக்கும் தந்திர விஷயத்திலும் நீதிகள் விஷயத்திலும் உள்ள வேற்றுமை அஜகஜாந்திரமெனலாம்.

பஞ்சதந்திரக் கதைகளிற் பல கதாசரித்சாகரம் என்ற ஒரு பெரும் சம்ஸ்கிருத நூலிற் காணப்படுகின்றன.

பல பாஷைகளிலும் சென்று வியாபித்த பஞ்சதந்திரக் கதைகள் உலகம் உள்ளவரை ஒப்புயர்வில்லாக் கதைகளாக நிலைநிற்குமென்பது உண்மை. சம்ஸ்கிருத ஹிதோபதேசத்துக்கும் இப்பஞ்சதந்திரமே முதனூலாகும் என்னில் இதன் மாண்பைக் கூறவும் வேண்டுமோ?

மதுரை, செந்தமிழ்-IV-458 எஸ். சாமிநாதையர்.

ஹிதோபதேசத்தின் பாயிரத்தில், பாடலிபுரத்தரசனான சுதரிசனன் புதல்வர் பொருட்டு விஷ்ணுசர்மன் என்னும் பண்டிதனால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் பஞ்சதந்திரத்தின் பாயிரத்தும் மேற்கண்டவாறே சொல்லப்படுவதாயினும், அங்கே சோமசன்மா என்பவனால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. பஞ்சதந்திரக் கதைகளும் ஹிதோபதேசக் கதைகளும் பெரும் பான்மையும் வித்தியாசமுடையவைகளாக இருக்கவில்லை.

ஹிதோபதேச நூலாசிரியர், பஞ்சதந்திரத்திலும் வேறு கிரந்தங்களிலுமிருந்தெடுத்துத் தாம் ஹிதோபதேசம் செய்ததாகச் சொல்லுகின்றார். ஆனால் பஞ்சதந்திரமுண்டாய காலத்து ஒரு சுதரிசனனும் ஹிதோபதேசமுண்டாய காலத்து வேறொரு சுதரிசனனும் இருந்திருக்கவேண்டும். ஒரு சுதரிசனனாயின் அவன் காலத்தே அவன் புதல்வர்களுக்கு ஒரே கதையை வெவ்வேறு பெயர்புனைந்து ஏன் செய்தார்களெனும் ஆசங்கை இங்கே நிகழும்.

செந்தமிழ்-IV-623. காரை. கா. சிதம்பர ஐயர்.

உ. பஞ்சதந்திரப் பாடல்

பஞ்சதந்திரம் தமிழில் விருத்தப்பாவாலும் இயற்றப் பட்டுளது. இதனை இயற்றியவர் வீரமார்த்தாண்டதேவர் என்பது கீழ்வரும் செய்யுளால் தெரியவருகிறது. இவரு டைய காலம் இன்னதென்பது விளங்கவில்லை. ஆனாலும் தாண்டவராய முதலியார் காலத்துக்கு முற்பட்டவர் என்ப தில் சந்தேகமில்லை.

"வயவீர ரொன்பானை வழிபுற்ற மேலோன்
செயவீர மார்த்தாண்ட தேவன்—வியமாயப்
பன்னூலி னுண்ணூலாம் பஞ்சதந் தந்திரத்தை
மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து."

"மேதினி தனனில் வியாழன் பராசரன் சுகன்வி யாசன்
ஆதிசா ணக்கி யன்மா மனுவிவ ரறுவர் சொல்லும்
நீதிநூல் வழியே மிக்க நிறைமதிச் சோம சன்மா
ஓதிய தந்தி ரத்தைத் தமிழினு லுரைசெய் வேனே."

என்று நூலாசிரியர் முதனூல் வழியைக் கூறுகின்றமை யால், பஞ்சதந்திரம் மேற்கண்ட அறுவருஞ் செய்த நீதி நூல்களிலிருந்து திரட்டிச் செய்ததாக விளங்குகின்றது. 545 செய்யுட்களையுடையது. செய்யுணடை சாமானியமானது.

தாண்டவராய முதலியாரவர்கள் தமிழ்ப் பஞ்சதந்திரத்து விருத்தப்பாவினின்றும் வசன நடையாக்காமல் மஹாராஷ்டிர பாஷையிலிருந்து மொழிபெயர்த்து வசன நடை யாக்கின தற்குக் காரணம் யாதென்று புலப்படவில்லை.

வசன பஞ்சதந்திரமும் பஞ்சதந்திரப்பாடலும் சிற்சில இடங்களில் கதாசந்தர்ப்பங்களில் வேறு படுகின்றன. வச னத்தில் இருப்பன சில பாடலிலில்லை. பாடலில் இருப் பன சில வசனத்தில் இல்லை.

௩. முதற் பதிப்பு முதற் பத்திரம்

இது

தமிழ்த் தலைமைப் புலமை

நடாத்தும்

தாண்டவராய முதலியார்

மொழிபெயர்த்த

பஞ்சதந்திரக் கதை

சாலிவாகன சக வருடம் ௲௭௱௪௰௮-க்கு

மேற்செல்லாநின்ற விய வருடத்திற்குச் சரியான

கிறீஸ்து ௲௮௱௨௰௬-ம் வருடத்திற்

சென்னைக் கல்விச் சங்கத்தச்சுப்

பதித்தது.

---

௪. வித்துவான்-தாண்டவராய முதலியார்

பாயிரம்

தமிழ் கற்கப்புக்கோர் தமிழிலெழுதி வழங்குகின்ற பஞ்சதந்திரக்கதையைக் கற்கப்புகுந்தாற் குளிக்கப்புக்கோர் சேற்றைப் பூசிக் கொண்டாற்போல வழுக்களையே கற்றுத் தடுமாற்ற முறுதலால் சென்னைச் சங்கத்துத் தலைவராகிய ம-௱-௱-ஸ்ரீ ரிச்சர்ட் கிளார்க்குத் துரையவர்கள் உத்திரவினால் மகாராஷ்டிரத்திலச்சுப்பதித்திருக்கின்ற பஞ்சதந்திரக்கதையைத் தமிழின் மொழி பெயர்த்துச் சொற்பொருளழகுறப் பலவிடத்துச் சில கூட்டியுங் கற்போருலக நடையுஞ் சில செய்யுணடையுமான தமிழ் நன்குணரவுஞ் சுவையுற விம்மொழி பெயர்ப்புப் பஞ்சதந்திரக்

கதை சாலீவாகன சக ௵ ௲௭௱௪௰௭க்கு மேற்செல்லாநின்ற பார்த்திவ ௵த்துக்குச் சரியான கிறிஸ்து ௲௮௱௨௰௫ ௵ செய்து முற்றுப்பெற்றது.

—ஜ—

௫. ஏட்டுப்பிரதியின் முதலும் முடிபும்.

முதல்:

"கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழுங்
கணபதி யென்றிடக் கருமமாதலாற்
கணபதி யென்றிடக் கலக்க மில்லையே.

* * * *

முடிபு:

மகாராசனு மானந்தபரவசத்தை யடைந்து அநேக ஆடையாபரணங்களுடனே தாம் முன் சொன்னபடியே பாதிச் சீமையையும் அந்த மந்திரி சோம சன்மனுக்கு வெகுமானஞ்செய்தார். சமஸ்தமானபேருஞ் சந்தோஷமாக வாழ்ந்துகொண் டிருந்தார்கள்.

ஆதலால் இந்தப் பஞ்சதந்திரத்தை யெவர்கள் வாசிக்கிறார்களோ அவர்கள் நீதிமான்களா யிருப்பார்களாகில் தங்கள் நீதிகளிலே வேறுபடாமலும் தருமந்தப்பாமலும் நியாயமான சீவனஞ் செய்து நல்லோர்களென்று கீர்த்தி யடைந்து அந்தியத்திலே அழிவில்லாத பரமபதத்தைப் பெறுவார்களென்றும், இதை வாசிக்காநின்ற பேர்கள் மோசக்காரர்களாயிருப்பார்களாகில் தங்கள் மோசங்களிலே அநேக தந்திரவாதிகளென்னும் கீர்த்திகளுடனே உலகத்திலே வாழ்வார்களென்றும் பெரியவர்களாலே யாசீர்வதிக்கப்பட்ட பஞ்சதந்திரக்கதை யஞ்சும் முடிந்தன.

முற்றும்.

௬. பலவிஷயத்திரட்டு.

"இந்நூற்றாண்டில் (19வது) முற்றிலும் புதிய உரை நடையொன்று தோன்றியிருக்கிறது. அதுதான் உலக வழக்கை யனுசரித்த அழகிய வசன நடை...இந்நடைக்குக் கர்த்தா வென்று சொல்லத்தக்கவர் தாண்டவராய முதலியார். அவர் பெயர் ஞாபகத்தில் வைக்கத்தக்கது. பஞ்சதந்திரத்தைத் தமிழ் வசனநடையில் நமக்கு எழுதி உபகரித்தவர் அவர்தான். (A Comparative Grammar of the Dravidian Languages by Caldwel: Introduction P 150.)

நூல் வரலாறு கூறுமிடத்துச் சம்ஸ்கிருதத்தில் விஷ்ணுசர்மா என்று கூறப்பட்டிருப்பது தமிழில் சோமசன்மா என்று வரையப் பட்டுள்ளது.

முதல் நான்கு தந்திரங்களும் எளிய நடையிலும் ஐந்தாந் தந்திரம் உயர்ந்த கடினமான நடையிலும் எழுதப்பட்டுள்ளன. கற்பவரது பாஷா ஞானம் முறைமையே அபிவிருத்தியடைவதற்கு நடைப்போக்கும் உயர்ந்து நிற்கிறது. பழமொழிகள் ஏற்ற விடங்களில் நன்கமைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் வசன நடைக்கு நல்ல வழிகாட்டியாகவுள்ளது.

* * * *

பஞ்சதந்திரம் மாணாக்கர்கள் உலகநடையும் செய்யுணடையுமான தமிழ் நன்குணரத்தக்கதாய்ச் சொற்பொருள் அழகுபெறச் சுவையுற்றது......உலவாப் பெரும் புகழ் படைத்துத் தமிழரும் தமிழ்நூல்களும் உள்ள அளவும் நின்று நிலவுறும் என்பது தமிழ்ப் புலவர் துணிவு: ஸ்ரீ. செல்வகேசவ முதலியார்.

"இந்நூலிலுள்ள கதைகள் இத்தேசத்தில் வழங்கும் கதைகளெல்லாவற்றினும் மிகச் சிறந்தவையாய், படிக்கப் படிக்க இனிமை தந்து, அரசர்க்குரிய பலநீதிகளையும், எல்லார்க்கும் பயன்படத்தக்கனவும் சமயத்திற்கு ஏற்றனவுமாகிய அநேக யுக்திகளையும் நன்றாகத் தெரிவிப்பன. இக்கதைகளில் சில மகா பாரதத்திலும் புராணங்களிலும், மற்றும் சில பழைய நூல்களிலும் காணப்படுகின்றன.

* * * *

"மக்களுக்குரிய குணங்களையும் தொழில்களையும் விலங்குகளுக்கேற்றிக் கூறிப் பஞ்சதந்திர முழுதும் ஒருவித நகைச்சுவை நிரம்பியுள்ளது. எவ்வாறெனில், மிருகங்கள் வேதங்களை யோதுகின்றன; சந்தியாவந்தன முதலியன செய்கின்றன; தேவர், முனிவர், வீரர்களைப்பற்றி வார்த்தையாடுகின்றன; நுட்பமான நீதிசாஸ்திரங்களை எடுத்துப்பேசுகின்றன; இச்சமயங்களில் திடீரென்று அவற்றின் இயற்கைக்குணம் வெளிப்படுகின்றது. பிராமணரது வஞ்சகமும் பேராசையும், அரச சபையிலுள்ளாரது படிற்றொழுக்கமும் பெண்களின் ஒழுக்கத்தவறும் முதலாகிய பலவித துர்க்குணங்கள் பழிக்கப்பட்டும் கண்டிக்கப்பட்டுமுள்ளன. இந்தியரது மற்ற நூல்வகைகளுட் சாதாரணமாயுள்ள புனைந்துரைக்குமாறாக இதனுள் உயிர்வாழ்க்கையின் உண்மை நிலைமைகளை நேராக எடுத்துரைத்தல் மிக்குளது." (Imperial Gazetteer of India, The Indian Empire Vol II. page 250.)

* * * *

முதலியாரின் பஞ்சதந்திரத்துக்கு முன் தமிழில் பஞ்சதந்திர வசனம் ஒன்று மிகப் பிழையுடையதாய் வழங்கி

வந்ததென்றும், அவரது பஞ்சதந்திரம் பதிப்பிற்கு ஒரு வருஷம் முந்தி எழுதி முடிந்ததென்றும் அறிகிறோம்.

*　　*　　*　　*

பஞ்சதந்திரப் பயன்

"அஞ்சுதந் திரத்தி லுள்ள வுகம தறிய வோத
இன்சொலைக் கேட்டு மைந்த ரிகலெலா மறிந்தா ரப்போ
வெஞ்சமர் தன்னி லேகில் வேண்டிய நினைவு தோன்றும்
பஞ்சதந் திரத்தைப் பார்த்தாற் பலவகை தெரிய லாமே."

பஞ்சதந்திரக் கதை வரலாறு

கல்விப் பொருளிலுஞ் செல்வப் பொருளிலுங் குறை வில்லாதவர்களுக்கு உறைவிடமாயிருக்கின்ற பாடலிபுரம் என்னும் ஒரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்திற் சகல சுகுணங்களோடுங் கூடிய சுதரிசனன் என்னும் அரசனொருவ னிருந்தான். அந்த அரசன் தன் பிள்ளைகள் கல்வியில் விருப்பமில்லாமல் மூடர்களாயிருந்ததைக் கண்டு, வெகு விசனத்தோடும் ஆலோசிக்கலானான் :

'கல்வியுந் தர்மகுணமு மில்லாத பிள்ளைகள் இருந்து ஆவதென்ன? பால் கொடாத எருமைகளைக் காப்பாற்றின் பலனுண்டா? வேதசாஸ்திரம் அறிந்தவனாய் ஒரே பிள்ளை இருந்தாலும் அவனாலே குடும்பமெல்லாஞ் சுகமுடையும். இப்படிக்கில்லாத பிள்ளைகள் கர்ப்பத்திலே யழிந்தாலும், அழியாவிட்டாற் பிறந்தவுடனே இறந்தாலும் போவது நல்லது. குலத்தில் அயோக்கியனான பிள்ளை இருக்கலா

காது. ஜன்மாந்தர புண்ணியத்தினாலே இம்மை மறுமைக்குச் சுகங்கொடுக்கிற புத்திரன் பிறக்கிறான்; பாபத்தினால் குலத்தைக் கெடுக்கிற புத்திரன் பிறக்கிறான். மேலும், இந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள் என்ன தவஞ் செய்தார்களோ என்று கண்டோர் சொல்லும்படி நடக்கிறவனல்லவோ பிள்ளை!"

இவ்வாறு தனக்குள்ளே ஆலோசித்துப் பெருமூச்சு விட்டு, பின்பு சபையைப்பார்த்து, "இளமையுஞ் செல்வமும் ராஜசமும் அறிவில்லாமையுமாகிய இந்த நான்கினுள் ஒன்றொன்றுதானே கேட்டுக்கெல்லாம் மிகுந்த துணையாயிருக்கும். இந்த நான்கும் ஒருவனிடத்திலிருந்தால் அவன் என்ன பாடு படான்? பிள்ளை யெண்ணிக்கைக்குப் பிறந்து, துன்மார்க்கர்களா யிருக்கிற என் பிள்ளைகளுக்கு நீதி சாஸ்திரோபதேசத்தினால் எந்த மகா புருஷன் மறு சனனம் வரப்பண்ணுவான்?" என்றான்.

அப்போது சகல நீதி சாஸ்திரங்களிலும் வல்லவனாகிய சோமசன்மா என்பவன் எழுந்து, "அறிவில் இவர்களுக்குச் சமானரானவர்கள் இவ்வுலகத்திலில்லையென்று சொல்லும்படி நான் ஆறுமாசத்திற் செய்ய மாட்டுவேன். அதுவரைக்கும் நீர் நாளை எண்ணிக் கொண்டிரும்," என்று சபதம் பண்ணினான். அதைக் கேட்டு, நடுக்கடலிலே திசை தப்பி மயங்கும் மாலுமிக்கு ஒரு துறை தோற்றினாற்போல அரசன் மிகவும் மன மகிழ்ந்து, அவனுக்கு உபசாரஞ்செய்து, தன்னுடைய பிள்ளைகளை அவன் வசத்தில் ஒப்பித்தான். சோமசன்மா உடனே அந்த ராஜகுமாரர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், கருப்பஞ் சாற்றைக்

காய்ச்சி ஒரு சர்க்கரைக் கட்டியாகத் திரட்டினாற்போல, நீதி சாஸ்திரங்களைப் பஞ்சதந்திரக் கதையாகக் கற்பித்து, அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினான். எப்படியென்றால்,

சோமசன்மா, "ஓ ராஜ குமாரர்களே, உங்களுக்கு வேடிக்கையாகச சில கதைகள் சொல்லுகிறேன்; கேளுங்கள்," என்று சொல்ல,

ராஜகுமாரர்கள், "அஃது என்ன கதை?" என்றார்கள்.

சோமசன்மா, "பஞ்சதந்திரக்கதை," என்று சொன்னான்.

ராஜகுமாரர்கள், "பஞ்சதந்திரம் என்பதென்ன? தெரியச் சொல்லவேண்டும்," என்றார்கள்.

சோமசன்மா, "அவை மித்திரபேதம், சுகிர்ல்லாபம், சந்திவிக்கிரகம், அர்த்தநாசம் அல்லது லப்தஹானி, அசம்பிரேக்ஷிய காரித்துவம் என்னும் ஐந்துமாம். அவைகளுள், மித்திரபேதமாவது சிநேகத்தைக் கெடுத்துப் பகையுண்டாக்கல்; சுகிர்ல்லாபமாவது தங்களுக்குச்சமானமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல்; சந்திவிக்கிரகமாவது பகைவரை யடுத்து உறவுசெய்து வெல்லுதல்; அர்த்தநாசமாவது தன் கையிற் கிடைத்த பொருளை யழித்தல்; அசம்பிரேக்ஷிய காரித்துவமாவது யாதொரு காரியத்தையுந் தேற விசாரியாமற் செய்தல்," என்று சொன்னான்.

ராஜகுமாரர்கள், "ஐயா, அந்தக் கதைகளை எங்களுக்கு விளங்கச் சொல்லவேண்டும்," என்றார்கள்.

சோமசன்மா, "உங்களுக்கு மங்களமுண்டாகுக!" என்று ஆசீர்வதித்துச் சொல்லத் தொடங்கினான்.

பஞ்சதந்திரக் கதை

முதலாவது-மித்திரபேதம்

'ஒரு காட்டில் ஒரு சிங்கமும் எருதுங் கூடி மிகவு மொருமையாக வாழ்ந்திருந்தன; அந்தச் சிநேகத்தைக் கோட் சொல்லுதலு முலோபகுணமுமுள்ள ஒரு நரி வந்து கெடுத்தது' என்று சொல்ல, ராஜகுமாரர்கள் 'அதெப்படி' என, சோமசன்மா சொல்லத் தொடங்கினான்.

சிங்கத்திற்கும் எருதுக்கும் உண்டாயிருந்த நட்பை நரி கெடுத்து எருதைக் கொல்வித்தக் கதை.

1. சஞ்சீவகன் என்னும் எருது வர்த்தமானனாற் காட்டில் விடப்படுதல்.

தென்னாட்டிலே மகிழாரூப்பியம் என்னும் பட்டணத்தில் வர்த்தமானன் என்றொரு வர்த்தகனிருந்தான். அவனுக்கு வெகு பணமிருந்தும் இன்னுஞ் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையினால் பின்வருகிறபடி ஆலோசிக்கலானான். யாதொன்று சம்பாதிப்ப தருமையோ அதைச் சம்பாதிக்கவேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்றவேண்டும். காப்பாற்றினதை விருத்தி பண்ணவேண்டும். விருத்திபண்ணினதைத் தானு மனுபவித்து உத்தம பாத்திரத்திற் செலவழிக்க வேண்டும். காப்பாற்றாத திரவியம் நாசமாகும். விருத்தி பண்ணாதது குறையும். தானு மனுபவித்துச் சற்பாத்திரத்திற் செலவழியாதது வீணாகுமெனச் சாஸ்திர மிருக்கின்றதி

னாலும், மேலுமின்பமும் புண்ணியமும் கீர்த்தியும், மனிதருக்குள்ளே பெருமையு முறவும், நினைத்தது முடிக்கலுமாருக்குண்டு? ; திரளாகப் பணங் குவித்தவர்களுக்கே யுண்டு. இல்லாதவர்கள் உலகத்திலே நடைப் பிணமாவார்களாகையினாலும், மேன்மேலுஞ் சம்பாதிப்பதே யோக்கியமென்றாலோசித்துக்கொண்டு, தன்னிடத்திலிருக்கிற சரக்குகளை வண்டியிலேற்றி, அதிற் சஞ்சீவிகன் நந்தகன் என்னும் பெயரையுடைய இரண்டெருதுகளைப் பூட்டி நடத்திக்கொண்டு தேசாந்தரம் போனான். போகும்போதொரு நாள் நெருங்கிய காட்டிலே மிகுந்த பாரத்தினாற் சஞ்சீவிகன் என்கிற எருது காலிடறி விழுந்து நொண்டியாயிற்று. அப்போது வர்த்தமானன் அந்த எருதுக்குப் பதிலாக வேறொரெருதை வண்டியிற் கட்டி ஓட்டிக்கொண்டவ்வெருதுக்கு ஓராளைக் காவல் வைத்துப் போனான். பிறகு அந்தச்சேவகன் வர்த்தகனிடத்துக் கிரண்டொருநாட் கழித்துப் போய் அந்த எருது செத்துப் போயிற்றென்று பொய் சொன்னான்.

— உ —

2. சஞ்சீவகனது முக்காரத்தை கேட்டுச் சிங்கம் அஞ்சுதலும், கரடகன், தமனகன் என்னும் நரிகள் தமக்குள் பேசிக்கொள்ளுதலும்.

காட்டில் விடப்பட்ட எருதோ ஆயுசு பலத்தினாற் பிழைத்துப் புல்லுமுதலாகிய மேய்ச்சலாலே மிகவும் பெருத்துக் கொழுத்து ஓடிநடக்க காலுங்கூடி அந்தக் காட்டிலேயதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தது. அப்படியிருக்கையில் காட்டில் சஞ்சரிக்கின்ற பிராணிகளுக்கெல்லாம் ராஜ்ஜிய பட்டாபிஷேகச் சடங்குகளில்லாமல் தன் வல்லமையினால் ராஜத்துவத்தை யடைந்திருக்கின்ற சிங்கமானது தன் பராக்கிரமத்தாற் சம்பாதிக்கப்பட்ட ராஜ்ஜியத்தைச் சுகமாக அனுபவித்துக்

கொண்டிருந்தொருநாள் தாக மெடுத்துத் தண்ணீர் குடிக்க யமுனை யாற்றங்கரைக்குப் போகும் போது அங்கே சடிதி யிலென்றைக்குங் கேட்டறியாத பேரிடி முழக்கம்போலும் அந்த ரிஷபம் முக்காரம்போட்ட தொனியைக் கேட்டுத் திடுக்கிட்டு இதேது புதிதாயிருக்கின்றதென்று பயந்து நடுநடுங்கித் தண்ணீர் குடியாமற் சும்மா அசைவற்று நின்றுவிட்டது. அப்போதவ்விடத்திலிருந்த சிங்கத்தினுடைய பிரதான மந்திரி குமாரர்களாகிய கரடகன் தமனகன் என்கிற நரிகளிரண்டும் இந்த அதிசயத்தை யறிந்து ஒன்றுக்கொன்று பேசத் தொடங்கின.

தமனகன் கரடகனைப் பார்த்து, நம்முடைய அரசன் தண்ணீருக்குப் போய்க் குடியாமலேன் சும்மா நிற்கின்றான்?' என, கரடகன் 'அதை, விசாரிக்கிறதினால் நமக்காவதென்ன? இரை யகப்படுமா? பெருமை யுண்டாகுமா? இணைற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேனை? சும்மாவிரு; தனக்குத் தகாத காரியத்தைச் செய்கிறவன் கடாவிய ஆப்பைப் பிடுங்கின குரங்கு பட்ட பாடு படுவான்' என்று சொல்ல, 'அதென்ன?' என்று தமனகன் கேட்க, கரடகன் சொல்லுகின்றது:—

க. குரங்கு ஆப்பைப் பிடுங்கி உடல் நசுங்கின கதை.

'மகததேசத்தி லிருக்கின்ற சுதத்தன் என்போனொருவன் கோயிற் றிருப்பணிக்காகக் கொண்டுவந் தறுக்கவிட்ட மரங்களில் வாட்காரன் பிளக்கும்படி முளைகளடித்துவிட்டுப்போன ஒரு மரத்தின்மேலந்தக் கோயில் நந்தவனத்திலிருக்கின்ற குரங்குகளி லொன்றுவந்துட்கார்ந்தது. அது அம்மரப்பிளப்பி லடித்த முளையை யசைத்துப் பிடுங்கின வுடனே பிளப்பு நெருங்கி யுடனசுங்கி யிறந்தது.

ஆதலால் தனக்குத் தகாத காரியத்தைச் செய்தால் யார்க்கும் 'பிராணசேதம் வரும்' என்று சொல்லி, 'நேற்று நாம் தின்று மிகுந்திருக்கின்ற இரையைத் தின்று சுகமே யிருப்போம் வா' என்று கரடக னழைத்தது.

தமனகன் கரடகனைப் பார்த்து 'சுவாமி காரியஞ் செய்யாம விரைதேடுகிறதையே பெரிதாக நினைக்கலாமா? ஒருவன் மித்திரர்களுக் குபகாரமுஞ் சத்துருக்களுக் கபகாரமும பண்ணவேண்டும். அதற்கிராஜசேவையே தக்கது. மேலும் ராஜாவை யடுத்திருக்கையில் வெகு ஜனங்களுக்கு நன்மை செய்வதே ராஜசேவைக்குப் பிரயோசனமாம். நன்மை செய்வதற் கிடமில்லாவிட்டால் உயிர் பிழைத்திருப்பதனாலென்ன? காக்கையுங் காகமலியையு மெச்சிலையு மலத்தையுந் தின்றுயிர வருஷம் பிழைத்திருக்கின்றது. நாயும பசையில்லாத வெள்ளெலும்பைக் கவ்விக் கடித்துக் கடித்துப் பல்லசைந்தும் பசிதீராமற் சந்தோஷத்தை யடைகின்றது. மேலும அது எஜமானன் கையிலிருக்கிற ஒரு கவள மெச்சிலைப் பார்த்துக் காலில் விழுந்து வயிற்றை யெக்கிக்கொண்டு மெலிய முகத்தைக் காட்டி முகத்தைப் பார்த்து வாலைக் குழைத்துக் கெஞ்சிக் காத்துக்கிடந்து கொஞ்ச மெச்சிலை வாங்கித் தின்னும். யானையோ, பாகனைப் பாராமலும் அடிக்காமலும் அவன் வேண்டி வேண்டி வலியக் கொடுக்கக் கர்வத்தோடு வாங்கி நாயைக்காட்டிலு மாயிரம்பங் கதிகஞ் சாப்பிடும். சிங்கம் பசியினாற் சங்கடப்படும்போது, நரி சமீபத்திலிருந்தாலு மதை அசட்டைபண்ணி யானையையே கொல்லும். ஆதலால் உலகத்தில் யார் புகழோடு ஜீவிக்கின்றார்களோ அவர்களே பாக்கியவான்கள். சிறு குழிகள் கொஞ்சம் தண்ணீரா னிறையும். எலியின் சேரங்கை சில தானியத்தா னிரம்பும். அப்படிப்போல மூடன் இதாகிதந் தெரியாமற் கொஞ்சத்திலே ஜீவ

ணமபண்ணுவான். அவனுக்கும் பசுவுக்கு மென்ன பேதம்? ஆகையால் ராஜகாரியம் பார்த்துப் பெருமையுடனே ஜீவிக்கிறதே நல்லது' என்றிப்படிச் சொல்லக் கேட்டு, **கரடகன் தமனகனைப்** பார்த்து, 'நல்லது இந்த யோசனைகளுக்கும் இந்தப் பேசசுக்களுக்கு மிப்போது நாம் ராஜகாரியத்திலிருக்கவில்லை; இரை தேடுகிற காரியத்திலிருக்கின்றோம். அப்படியிருக்க நீயேன் வீணை மனோராசசியம பண்ணுகின்றாய்? முடவன் கொமபுத் தேனுக் காசைப்பட்டாற் கிடடுமா?' என்றிகழ்ந்து சொல்ல,

தமனகன் 'நல்ல திருக்கட்டும, பிரதானியுங் காலத்தினாலப்பிரதானியாகின்றான். தன் முயற்சியாலுங் குணத்தினாலும் லகுவானவனுஞ் சமர்த்தனாகின்றான். யாரும் மேலான காரியத்தையே ஆலோசிக்கவேண்டும். அது கைகூடாவிட்டாலும பெருமை வரும். புத்திசாலிக ளருமையான காரியங்களைச செய்வார்கள். புத்தியீனர்க ளெளிமையான காரியங்களைச செய்வார்கள். மலையுசசியி லொரு பெருங் கல்லையேற்றுதலரிது; அங்கிருந்து அதைத் தள்ளுவதெளிது. ஏரியினீரைக் கட்டுதலரிது; உடைத்த லெளிது; பெருமையுஞ் சிறுமையு மவரவராலேயே வரும. 'முயற்சியுடையா ரிகழ்ச்சியடையார்' என்னும பழமொழியானுலுங் கேட்டிலையா?' என்றிப்படிச சொல்ல,

தமனகனைக் கரடகன் பார்த்து, 'நல்லது நீபோய்ச் சிங்கத்தினிடத்தி லெந்தக்குறித்துப் பேசுவாய்?' என,

தமனகன் 'நம்முடைய சுவாமி மூடத்தனத்தாற் பயந்திருக்கின்றான். அதை நீ யெப்படி யறிந்தாயென்று கேட்கின்றாயோ? சொன்ன பொருளைப் பக்ஷியு மிருகங்களு மறிந்துகொள்ளும்; சொல்லாமலறிகின்றவனே பண்டிதன். அப்படி யறியாவிட்டாற் புத்தியாற் பிரயோசனமென்ன?

நானு டிங்கேயிருந்தபடியே யறிந்தேன். இப்போது நானிதை முன்னிட்டுக்கொண்டு போய்ச் சிங்கத்தைச் சிநேகம் பண்ணிக் கொள்ளுகின்றேன்' என,

தமனகனைப் பார்த்துக் **கரடகன்**, 'நம்முடைய அரசர்கள் மோந்துகொள்ளுவது போற் கடிக்கின்றவர்கள். அரசரும், நெருப்பும், பாம்புஞ் சரி. அப்படியானும் பழக்கமில்லாதவிருக்கையி லவனை யெப்படிச் சிநேகம் பண்ணிக்கொள்வாய்?' என, அப்போது,

தமனகன், 'நான் பேசுவதிற் சதுரனென்றறியாயா? சமர்த்தனுக் கெதுதான் பெரிது? பறக்கிற பறவைகளுக் கெது தூரம்? வித்துவானுக் கெது பரதேசம்? பிரியமாகப் பேசுகிறவர்களுக் கெவன் சத்துரு?' என,

கரடகன், 'அப்படியானாலும் ராஜாக்களிடத்தில் அகாலத்திற் போனால் அவமானம் நேரிடும்' மென்றது.

அதற்குத் **தமனகன்** 'அவமானம் வந்தாலு மெஜமானன் சமீபத்திலேயே இருக்கவேண்டும். யார் சமீபத்திலிருக்கின்றார்களோ அவனுடனே அரசர்கள் காரியங்களைச் சொல்லுகின்றார்கள். கொடிகள் கிட்ட விருக்கிற மரத்திலேயே படரும்; அரசர்களும் ஸ்திரீகளுந் தங்களைக் காத்து இங்கிதம் பேசுகிறவர்களிடத்தில் மனதிரங்குவார்கள்' என,

கரடகன் 'நல்லது, நீ அவனிடத்தி லெப்படிப் பேசுவாய்?' என்றது.

தமனகன் 'நல்ல மழை பெய்திருக்கையி லெப்படி விரையினின்று முளைகள் புறப்படுமோ அப்படி ராஜாவின் கேள்விக்கேற்க என் வாக்கினின்று முத்தரம் புறப்படும். ஆயினு மொருவேளை பிரகஸ்பதியும் பேச்சிற் றவறுவானானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்? எப்படியுங் காலமறிந்து பேசினால் யாதோர் அவமானமும் வராது. அரசர்கள் தங்கள்

காரியம் யாராலே யாகின்றதோ அவனிடத்தி லொருவேளை சிறிது குற்றம் நேரிட்டாலு மதைப் பாராட்டாம லவனைப் பரிபாலித்து விருத்தியடையப் பண்ணுவார்கள்' என,

கரடகன் 'அரசர்கள்மலைபோ லனுசரிக்கிறதற்குக் கடினமாயிருக்கின்றார்கள்' என,

தமனகன் 'ஆயினுமவர்களை சுபாவ மறிந்து பேசித் தனக்கிதம் பண்ணிக்கொள்ளவேண்டும்' என்று கரடகனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு சிங்கத்தினிடத்திற்குப் போய்த் தூரத்திலே நின்று தண்டம்பண்ணி அதனுத்தரவினு லுட்கார்ந்தது.

—o—

3. தமனகன் சிங்கத்தினிடஞ்சென்று அதனை உறவாக்கிக் கொள்ளுதல்.

உடனே, சிங்கம் 'நெடுநாளாய் உன்னைக்காணோம்' என,

தமனகன் 'இப்போது தேவரீரிடத்திற்கு வரத்தக்க காரியம் நேரிட்டதனால் தங்களுடைய திருவடியண்டை வரலானேன். இல்லாவிட்டால் வந்ததற்குப் பிரயோஜனமென்ன? ராஜாக்களுக் கொருவராலும பலனில்லாவிட்டாலு மொருவேளை சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். மற்றவைகளுகுக் கேட்பானேன்? மேலு மொருவேளை அரசர்கள் குணவானை அசட்டைபண்ணித் தள்ளி விட்டாலும் அவன் சற்குணம் போய்விடுமோ? நெருப்பைத் தலைகீழாகப் பிடித்தாலும் அதன் சுவாலை கீழாகுமா? ஆதலால் அரசர்கள் பரிசோதித்தறிந்து யோக்கியனை நல்ல காரியத்தில் வைத்தால் அவன் ராஜாவுக்குக் கீர்த்தியைப் பெருகப்பண்ணுவான். ஆகையால் என்னைத் தாங்கள் சிறு நரியென் றவமானம் பண்ணலாகாது. விஷ்ணு எடுத்திருந்த வராகவடிவை உலகத்திற் பூசிக்கவில்லையா? ரூபத்தைப் பாராமற் குணத்தையே பார்க்கவேண்டும்.

மலைபோலிருக்கின்ற தேர் சிறு சுள்ளாணியால் நிலைபெறும். நானோ சுவாமி காரியத்திற் பற்றுள்ளவன். கருவியுங் கால முமறிந்து கருமம் முடிக்கும் ஆற்றலுள்ளவன். இந்த வல்லமை யெல்லா முமது சார்பிருந்தாற் பிரகாசிக்கும். வாள் முதலிய ஆயுதங்களும், வீணை முதலிய வாத்தியக் கருவிகளும், பூமி யும், ஸ்திரீகளும், பரிபாலனம் பண்ணுகின்றவர்களாற் பிரகா சிக்கும். அண்டையிற் சமர்த்தனில்லாத ராஜாவுக்கு அப கீர்த்திவரும்' என்றிப்படிச் சொல்லக் கேட்டு,

சிங்கம் 'தமனகா! நீ என் பிரதானி புத்திரனல்லவா?' என,

தமனகன் 'சுவாமி' என்று வணங்கிச் சுமமாவிருந்தது.

சிங்கம் 'ஏதாவது சொல்லவேண்டுவதிருந்தாற் சொல்' என,

தமனகன் 'தேவரீர் தண்ணீருக்கு வந்து குடியாமல் மெய்ம்மறந்து சும்மா நிற்கின்றீர்களே' என,

சிங்கம் 'மெய்தான், நானிந்தக் காட்டில் வெகு நாட் சுகமாகவிருந்தேன்; இப்போதிதை விட்டு விடத் தக்கதாகச் சம்பவித்திருக்கின்றது; என்றைக்குங் கேளாத மேகமுழக் கம்போ லொரு தொனி இன்றைக்குக் கேட்டேன்; அத னாலேதான் அப்படிநின்றேன். அந்த முழக்கம்போலவே யிருக் குமல்லவோ அந்தப் பிராணியும்; ஆதலா லிதைக்குறித் தென்ன சொல்லுகின்றாயோ அதுவே எனக்குப் பிரமாணம்; இப்போது நீ வழுக்கிவிழுகையி லூன்றுகோல்போற் கிடைத் தாய்' என,

தமனகன் 'சுவாமி, தொனியினாலே பயப்படலாகாது. முன்னொருவன் ஒரு தொனியைக் கேட்டுப் பயந்து பிறகு நெருங்கிப் பார்த்தவுடனே அங்கே தோலுங் கோலுமிருக்கக் கண்டான்' என,

சிங்கம் 'அதென்ன' என்று கேட்க, தமனகன் சொல்லுகின்றது:

உ. நரியும் பேரிகையும்.

'ஒரு நரி பசியால் வருந்தி இரைக்காகத் திரிந்துதிரிந்து ஒரு போர்க்களத்தில் வரும்போது அங்கே அசதியிலுண்டான ஒரு பெரிய தொனியைக் கேட்டு மிகவும் பயந்து நான் செத்தேனென்று திடுக்கிட்டது. பிறகு சற்றே முன்னே போனவுடனங்கொரு பெரிய பேரிகையைப் பார்த்து, அத்திருக்கிற மரத்தின் கிளை காற்றிலசைந்து தகிலடிக்கத் தொனியுண்டாயிற்றென் றறிந்துகொண்டு அதனருகே போய்ப்பார்த்து, அங்கே பேரிகையின் தோலுங் கோலுமேயல்லாமல் வேறொன் றுமில்லையெனத் தெளிந்து சந்தோஷமடைந்தது.

ஆகலாற் சத்தத்தினாலே மாத்திரம் பயப்படலாகாது. தாங்கள் கட்டளை கொடுத்தால் இந்தச் சத்தத்தின் மூலத்தை யறிந்துவருவேன்' என, சிங்கம் அப்படியே செலவு கொடுத்தது.

4. சஞ்சீவகன் தமனகனாற் சிங்கத்தின் நட்பைப்பெறுதல்.

பிறகு தமனகன் சஞ்சீவக னென்னு மெருதினிடத்திற் போய்ப் பேசி அதைச் சிநேகம் பண்ணிக்கொண்டு, சிங்கத் தண்டை வந்து தண்டம்பண்ணி முன்னே நின்றது.

சிங்கம் 'நீ அந்தப் பிராணியை இன்னதென் றறிந்துவந் தாயா?' என,

தமனகன் 'தங்கள் கட்டளைப்படியே போய்ப் பார்த்தேன். முன் தாங்க ளெப்படி நினைத்தீர்களோ அப்படியே புஷ்டியா யிருக்கின்றான். அவன் தங்கணட்பை விரும்புகின்றான். கட்டளையானாற் றிரும்பிப் போய்த் தரிசனத்துக் கிட்டுக்கொண்டு வருவேன்' என,

சிங்கம்: ‘மறுபடி நல்ல தப்படியே யாகட்டும்’ என,

தமனகன் எருதண்டைபோய் உபசாரத்தோ டழைத்து வந்து ராஜாவைத் தரிசனம் பண்ணுவித்தது. பிறகு பிங்கள னுக்குஞ் சஞ்சீவகனுக்கும் வெகு சிநேகமுண்டாய் ராஜாவுக்கு மற்ற யாரு மவசியமில்லாம லிப்படி வெகுகாலங் கழிந்தது.

---

5. சிங்கத்திற்குச் சஞ்சீவகனிடத்தில் நட்பு மிகுந்திருப்பதைக் கண்டு தமனகன் கரடகன் என்னும் நரிகள் தமக்குட் பேசிக் கொள்ளுதல்.

அப்போது பிரதானி புத்திராகளாகிய **கரடக தமனக** ரென்னு மிரண்டு நரிகளுக்கு மிரையொன்று மகப்படாமையால் ஆலோசிக்கத் தொடங்கின.

தமனகன்: ‘நாம காட்டிலே தனித்திருந்த சிங்கத் துடனே எருதைச் சிநேகம் பண்ணுவித்தது, யானையானது தன் மத்தகத்தைக் கொத்துகிறதற்கு அங்குசத்தைத் தானே யெடுத்துப் பாகன்கையிற் கொடுக்கிறது போலாயிற்று; மேலும் முன்னாளாட்டுக்கடாச் சண்டையில் நரி செத்ததும், ஆஷாடபூதியின் கூட்டுறவாற் சந்நியாசி பொருளிழந்தது மெப் படி அவரவர்கள் குற்றத்தினாலேயே சம்பவித்தனவோ அப் படியே நம்முடைய தோஷத்தினாலே நமக்கிரை கிட்டாமற் போயிற்று’ என,

கரடகன் ‘அதெப்படிச்சொல்’ என, **தமனகன்** சொல் லுகின்றது.

‘ஒரு தேசத்தில் **தேவசன்மா** என்னும் ஒரு சந்நியாசி தான் பிச்சையெடுத்துச சம்பாதித்த திரவி யத்தைக் கந்தைக்குள்வைத்து யார்க்குந் தெரி யாமற்றைத்துப் போர்த்துக்கொண்டுபின்னும் பிச்சையெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு திரிய

ௗ. தேவசன்மா வென்னும் சந்நி யாசியும் ஆஷாட பூதி யென்னும் சீடனும்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY
மித்திரப்பகம் MADRAS
TIRUVANMIYUR

அச்சூதை யறிந்த ஆஷாடபூதி யென்னுமொரு திருட்டுப் பிராமணன் இந்தக் கந்தையை மாத்திரமெப்படியாயினுந் திருடிக்கொண்டால் காலமெல்லாந் திருட்டு வேலை செய்யவேண்டுவதில்லை; நம்முடைய காசிக்கு வெகு நாளைக்கு நடக்குமென்றுலோசித்தொரு பிரமசாரியைப்போல அந்தச் சந்நியாசியினிடத்திற்போய் அவன் காலில்விழுந்து,

'அடியேனுக்கு ஞானோபதேசஞ்செய்து இந்த நிசாரமாகிய சம்சார சாகரத்தில் நான் இன்னும் மலையாமற் சிறிது கடைக்கண்ணாற் பார்த்தென்னைக் கடைத்தேறப் பண்ணும்; ஓ மகானுபாவா! ஓ பாதுகாக்கும் சந்நியாச பரம புருஷா!' என்றிப்படி யழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாகக் கலங்கி நிற்க,

அதைப் பாசாங்கென்றறியாத அந்தச் சந்நியாசி, இவன் தலைமேற் கையைவைத்துப் 'பயப்படாதே' என்றான்.

அது முதலாக ஆஷாடபூதி வெகு பயபக்தியுடனே அவன் காலாலிட்ட வேலையைக் கையாற் செய்துகொண்டு, கந்தைக்குச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கு நாளில் ஒருநாள், ஒரு பிராமணன் வீட்டில் இருவருமே விலாப்புறம் வீங்கப் பிட்சை பண்ணிக்கொண்டு வெகுதூரம் வந்த பிறகு ஆஷாடபூதி ஒருவருமறியாமலொரு துரும்பை யெடுத்துத் தன் தலைமேலே வைத்துக்கொண்டு அந்தத் துரும்பைக் குருவுக் கெடுத்துக் காட்டி, 'ஐயா! நமக்குப் பிட்சை கொடுத்த பிராமணன் வீட்டுத் துரும்பென் றலையிலொட்டிக்கொண்டு வந்துவிட்டதே,' 'அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடலாமா? உப்பிட்டவரையுள்ளளவு நினை' என்று பழமொழியும் இருக்கின்றதன்றோ? என வாய்பதற நடுநடுங்கி 'இதை யந்த அன்ன தாதா வீட்டிற் போட்டுவிட்டிதோ நொடியளவில் வருவேன்' என்று குருக்கள் பார்க்கும்படி பரபரப்பாகச் சிறிதுதூரங் காலடி பிட்டத்திற்

படும்படியோடி, ஒரு செடிமறைவி னுட்கார்ந்திருந்துவிட்டு, பின்பு இரைக்க இரைக்க ஓடிவந்து ஆசாரியன் காலில் விழுந்தெழுந்து, 'சுவாமி! உம்முடைய அநுக்கிரகத்தினு லிந்தப் பாவத்திற்குத் தப்பினேன்' என்றன.

இதைப் பார்த்து அந்த வேஷச் சந்நியாசி ஆச்சரியப்பட்டு 'இவன் பரசொத்துக் காசைப்படாத பரமார்த்துமா' என்று நம்பித் தன்னுயிர்க்குச் சமானமாக நினைத்திருந்த கந்தையை அச் சிஷன் கையிற் கொடுத்து ஒரு குளக்கரையி லிருக்கச்சொல்லித் தான் ஜலபாதைக்குப் போய்க் காலெம்பப் போனவிடத்தில் இரண்டாட்டுக்கடாக்க ளொன்றோடொன்று முட்டிச் சண்டை செய்ய, அவைகளின் மண்டையிலிருந்து ஒழுகுகிற உதிரத்தை உண்ணலாமென்றொரு நரிபோய் இரண்டுக்கு நடுவிலகப்பட்டிறந்தது. அந்த அனர்த்தத்தைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரமிருந்தான். அப்போது அந்தச் சிஷன் இதுதான் நல்ல சமயம், இதுவிட்டாலினிக்கிட்டுமா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமே என்று நினைத்துக் கந்தையைச் சுருட்டிக்கொண்டு ஓடிப்போனான். உடனே சந்நியாசி வந்து பார்த்துச் சிஷனைக்காணாமல், ஓகோ நம்மை ஆஷாடபூதி ஏய்த்தானே! நாம் மோசம்போனோமே! என்று திகிற்பட்டு உபயுக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தியைப்போ லொருவருடனுஞ் சொல்லாம லிருந்துவிட்டான்' என, இதைக் கேட்டு,

கரடகன் இதற்கு 'நாம் செய்யத்தக்கதென்ன?' என்று கேட்க,

தமனகன் 'யாதொன்று போயிற்றோ அதை மறுபடி சேகரிக்கவேண்டும்; எதைச் சம்பாதிக்கவில்லையோ அதைச் சம்பாதிக்கவேண்டும்; எதிராகவரும் விக்கினங்களைத் தடுக்க வேண்டும்; என்றிப்படி யாலோசித்துப் பண்ணுகிறவனல்லவோ மந்திரி. இப்போது நமக்குப் பிங்கள சஞ்சீவர்களுடைய சிநேகத்தா லெல்லாச் சங்கடமு நேரிட்டன. இவர்களுடைய நட்பைப் பிரித்தாற்றான் நமக் கிவ்வ[illegible]டைக்கும்' என்று சொல்ல,

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS 41

கரடகன் 'அந்தப் பிங்கள சஞ்சீவகர்க ளுறவைக் கெடுக்க யாராலாகும்? மணியினின்று மொளிபிரிக்கப்படுமோ? இது முடியாத காரியமல்லவோ?' என,

தமனகன் 'என்ன சொல்லுகின்றாய்? உபாயத்தாலாகிறது பராக்கிரமத்தாலாகுமோ? ஒரு காகஞ் சொர்ணமாலையாலொரு கிருஷ்ண சர்ப்பத்தைக் கொன்றதறியாயோ?' என,

கரடகன் 'அதெப்படி?' என் றாவலோடு கேட்கத் தமனகன் சொல்லத் தொடங்கிற்று.—

ச. ஒரு காகம் சொர்ண மாலையால் பாம்பைக் கொன்ற கதை.

'ஒரு பெரிய மரத்திற் கூடு கட்டிக்கொண்டு ஆணும் பெண்ணுமாகிய இரண்டு காக்கைகள் நெடுநாள் வாழ்ந்திருக்கும்போது அந்த மரப்பொந்திலொருநாகம் வந்து சேர்ந்து அந்தக் காக்கையிடுகிற முட்டைகளை யெல்லாங் குடிக்கக்கண்டு இதற்கென்ன செய்யலாமென்று மிகவும் வியசனப்பட்டுத் தனக்குச் சிநேகமாகிய நரியினிடத்திற் போய் நடந்த சங்கதிகளைச் சொல்லி 'இப்போதாகிலும் முட்டைகளைக் காப்பாற்றுகிறதற் கென்ன செய்யலாம்?' என,

நரி, 'ஒரு நண்டானது வெகு நண்டானசையைக் காட்டிக் கொக்கைக் கொன்றாற்போல் அதை ஓருபாயத்தாற் கொல்ல வேண்டும்,' என,

காகம் 'நண்டு கொக்கை யெப்படிக் கொன்றது? சொல்லுமையா' என, நரி சொல்லுகின்றது:—

1. நண்டு உபாயத்தாற் கொக்கைக் கொன்ற கதை.

மீன்களையே மிகுதியுந் தின்று வளர்ந்த ஒரு கிழக் கொக்கானது குளக்கரையில் வந்து வியசனமாய் நின்று கொண்டிருந்தது. அப்போது அதிலிருந்த மீன்கள் கொக்கைப்பார்த்து, 'நீ உன்னாகாரத்தை விட்டுச் சும்மா விருப்பானேன் சொல்,' என,

கொக்கு, 'நான் மீன் தின்பது மெய்தான்; ஆயினும் இன்றைக் கிங்கே செம்படவன் வந்தெல்லா மீன்களையும் பிடிக்க விருக்கிறதினா லென்னுடைய இரைகளெல்லாம் நீர் மூலமாய்ப்போகுமே யென்றேங்கிச் சும்மா விருக்கின்றேன்,' என,

இதைக் கேட்டு மீன்களெல்லாங் கூட்டங்கூடி எவன் நமக்கபாயஞ் சொன்னானோ அவனே உபாயஞ் சொல்லுவா னென்றாலோசித்துப் பிறகு கொக்கைப் பார்த்து, 'நீயே எங்களை இப்போது இரட்சி' என,

கொக்கு, 'நான் செம்படவனோடு சண்டைபண்ணச் சமர்த்தனல்லேன்; மேலும் நான் கிழவன்; உங்களை வேறோரிடத்திற்குக் கொண்டுபோவேன்; அதனா லெனக்கும் இந்தத் தள்ளாமையான காலத்திற் பரோபகாரி யென்கிற பெயரும் வரும்; நீங்களும் வெகுகாலம் பிழைத்திருப்பீர்கள்,' என,

அப்போது அந்தப் பேதைமையான மீன்க ளெல்லாம் பிராணனைக் காப்பாற்றும் பொருட் டதன் பேச்சை நம்பி, 'நல்ல தப்படியே கொண்டு போகவேண்டும்,' எனக் கெஞ்ச,

அந்த வஞ்சனையான கொக்கு நடைக் கொவ்வொன்றாகக் குளத்திலிருக்கின்ற மீன்களையெல்லாம் மூக்கினாற் கௌவிக் கொண்டுபோய்ச் சில மீன்களைத் தின்று, மற்ற மச்சங்களை ஒரு பெரிய பாறையின்மே லுலரவைத்தது. பிறகு அந்தக் குளத்திலிருந்த ஒரு நண்டு இந்தக் கொக்கைப் பார்த்து,

'ஓ சீவகாருண்யனே! என்னையு மவ்விடத்திற்குக் கொண்டுபோக வேண்டும்,' என வேண்டிக்கொள்ள,

கொக்கு, வருங்காலத்தி லெதுவும் வலியவருமென்றுள்ளுக்குள்ளே சந்தோஷித்து அப்படியே நண்டையுங் கவ்விக் கொண்டு போகும்போது, வழியில் மீன்கள் செத்துக்கிடக்கிறதையும், மீன் முட்கள் சிந்திக்கிடக்கிறதையும், மீன்கள்

பாறையின்மே லுலருகிறதையும், நண்டு பார்த்து, 'ஐயோ! இந்தக் கொக்கு, பல மீன்களையுங் கொன்று நம்மையுங் கொல்லவந்தது! நம்மைக் கொல்வதற்கு முன்னமே நாமிதைக் கொல்வோமென்று ஒருபாயம் நினைத்துக் கொக்கைப் பார்த்து, 'நீ என்னை வருத்தப்பட் டெடுத்துக்கொண்டு வந்தாய்; அங்கே என்னுடைய பரிவாரங்கள் இருக்கின்றன; ஆகையால் அங்கே என்னை நீ மறுபடியுங் கொண்டுபோனால் அவைகளைக் காண்பிப்பேன்,' என, அதைக் கேட்டுக் கொக்குப் பேராசைப் பட்டுத் திரும்பி அந்தக் குளத்திற்கு நேரே வருகையில் நண்டு கொடுக்கினால் அந்தக் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக நறுக்கிக் குளத்தில் விழுந்து சுகமாய் வாழ்ந்தது.

ஆகையால் அந்தக் கொக்கைப்போலப் பாம்பையுங் கொல்ல வேண்டும்,' என,

காகம் 'அப்படிப் பாம்பைக் கொல்ல நான் செய்யவேண் டிய உபாயமென்ன?' என்று கேட்க,

நரி, 'இப்பட்டணத்து இராஜகுமாரி குளிக்கிற மஞ்சனச் சாலைக்குப்போ; அவள் ஸ்நானம்பண்ணும்போது ஆபரணங் களைக் கழற்றி வைத்திருப்பாள்; அந்த ஆபரணங்களிலொ ன்றை யெடுத்து ஜனங்கள் பார்க்கும்படி கொண்டுவந்து அந்த மரப்பொந்திற் போடு' என்று சொல்ல, காக்கையும் அப் படியே செய்ய அந்த இராஜனுடைய வேலைக்காரர் போய் அந்த மரத்தின் பொந்தைப் பிளக்க, நாகஞ் சீறிவந்தது; வரவே அதை இரண்டு துண்டாய் நறுக்கி யெறிந்தார்கள். இப்படிக் காகத்தின் காரியம் நிறைவேறிற்று. ஆகையால் எல்லாம் உபாயத்தாற் கைவசப்படும். எவன் புத்திமானோ அவன் பல வான். எவனுக்குப் புத்தியில்லையோ அவனுக்குப் பல மெங்கே? பூர்வம் புத்திபலத்தினால் ஒரு முயல் சிங்கத்தைக் கொன்றது என,

'அதெப்படி?' என்று கரடகன் கேட்க, தமனகன் சொல்லுகின்றது :—

ஒரு நெருங்கிய காட்டில் மதோன்மத்தன் என்னுஞ் சிங்கமானது அக்காட்டிலிருக்கின்ற மிருகங்களையெல்லாங் கொன்று தின்று கொழுத்து வெறிகொண்டு திரியும் நாளில் மிருகங்களெல்லாம் ஒன்றாகத் திரண்டுபோய், 'ஓய் மிருகேந்திரா! உம்முடைய காட்டிலிருக்கின்ற மிருகங்களையெல்லாம் இப்படிக் கொன்றால் மிருகங்கள் நிர்மூலமாய்ப்போம். ஆதலால் நாங்கள் தினமொவ்வொன்று உமக்கிரை கொடுத்துக்கொண்டு வருகின்றோம்; அதை நீர் பட்சித்துக்கொண்டிருக்கலாம்' என்று பிரார்த்திக்க, சிங்கம் மெய்தானென்று நம்பி அதற்குடன்பட்டு 'அப்படியே செய்கின்றேன்' என்று சத்தியஞ்செய்து கொடுத்தது. பின்பு அவ்வாறு ஒவ்வொன்றாகத் தின்றுகொண்டு வருநாளில், ஒருநாள் ஒரு கிழமுயலினுடைய முறைவந்தது.

௫. முயல் சிங்கத்தைக்கொன்ற கதை.

அப்போது விலங்குகளெல்லாங் கூடி 'இன்றைக்கு உன் முறை போ' என்று சொல்ல, முயலானது இன்றைக்கு நமக்கு மரணம் வந்தபடியால் இதற்கோருபாயம் யோசிக்க வேண்டும். புத்திமானுக் கெதுதான் கைகூடாது? ஆகையால் நாமிப்போது உபாயத்தாற் சிங்கத்தைக் கொல்வோமென்று ஆலோசித்து, மெல்ல மெல்ல வந்து அச்சிங்கத்தின் பசிவேளை தப்பி வர,

சிங்கம் முயலைப் பார்த்து, 'முயலே! யானையானாலும் என்னுடைய பசிவேளை தப்பி வருகிறதில்லையே; நீ எவ்வளவு பிராணி? இப்படித் தாமசமாய் வரலாமா?' என்று மிகுந்த கோபத்தோடு கையைத் தரையிலே மோதிக் கேட்க,

முயல் 'ஐயனே! இதுவென் குற்றமன்று; உம்முடைய பசிவேளைக்கே வந்தேன்? வந்த வழியில் ஒரு பொல்லாத சிங்கத்தைக் கண்டு பயந்து ஒளித்திருந்து அந்தச் சிங்கம் போன பின்பு வந்தேன்' என்று சொல்ல,

சிங்கம் 'என்னை யல்லாமல் இந்தக் காட்டில் வேறே சிங்கம் நீ பார்த்தாயா? காட்டு வா' என்றழைக்க, முயல் அழைத்துக்கொண்டு போய்ச் சேறும் நீரும் இருந்த ஒரு பாழ்ங்கிணற்றைக் காட்டி 'இதிலே யிருக்கின்றது' என்று சொல்ல, சிங்கம் முயலின் பேச்சை நம்பிக் கிணற்றை யெட்டிப் பார்த்து அதிற் றோன்றின தன் நிழலைக் கண்டு அந்தச் சிங்க மிங்கே யிருக்கின்றதென்று நினைத்துக் கோபத்தோடு அதைக் கொல்லவேண்டுமென்று அதிற் பாய்ந்து சேற்றி லழுந்தி யிறந்தது.

ஆகையால், 'எவன் புத்திமானோ அவன் பலவானென்று உனக்குச் சொன்னேன்' என,

கரடகன் 'சிங்கத்தினிடத்திற்குச் சுகமாய்ப்போ, உனக்கு மங்களமுண்டாகட்டும்' என்றது.

6. தமனகன் சஞ்சீவகன் என்னும் எருதுக்கும் சிங்கத்திற்கும் பகை யுண்டாக்கல்.

பிறகு தமனகன் அந்தச் சிங்கந் தனித்திருக்கின்ற சமயம் பார்த்துப் போய்த் தண்டம்பண்ணி, 'சுவாமி! உமக்கு இன்றைக்கொரு பொல்லாங்கு நேரிட்டது. அதை நானறிந்து கட்டளையில்லாமல் விண்ணப்பம் பண்ணிக்கொள்ளலானேன்' என,

சிங்கம் 'அஃதென்ன சொல்' என,

தமனகன் 'உம்முடைய மித்திரனாகிய சஞ்சீவகன் உம்மிடத்தில் விசுவாசங் காண்பித்து உம்முடைய இராச்சியத்தைப் பிடுங்கிக்கொள்ள யோசித்திருக்கின்றான். இதை நீர் பொய்

யென்று நினைத்துக் கோபித்தாலும் அல்லது தண்டித்தாலும் ராஜனுக்கொரு துன்பம் வரும்போது தன் நலத்தைப் பாராமல் ராஜனுக்கு நல்ல உபாயங்களைப் போதித்துச் செய்யத்தக்க காரியங்களைச் செய்வித்தல் மந்திரிகளுக்கு நீதித்தொழிலாகையால் உமக்கிதைத் தெரிவித்தேன்' என,

பிங்களன் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுச் சும்மா விருந்தது. பின்னும் தமனகன் 'நீரவனை முக்கிய பிரதானியாக்கினீர்; அப்படியே யிருக்கட்டும், எனக்கென்ன? ராஜாவும் பிரதானியுஞ் சமானமாயிருந்தால் ராஜலட்சுமி அவ்விருவரிலொருவனைக் கைவிடுவாள்; மேலும் எப்போது ராஜா ஒருவனையே பிரதானியாக்குகின்றனோ அப்போதந்தப் பிரதானிக்குக் கர்வமுண்டாகின்றது. அவன் சுதந்தரனாய் இராச்சிய வாசையால் ராஜாவைக் கொல்ல இச்சிக்கின்றான்; ஆகையால் இப்படிப்பட்ட மந்திரியை வேரோடு களையவேண்டும். இல்லாவிட்டால் அவனால் கேடு நேரிடும்: இது தங்களுக்குச் சொல்லவேண்டுமா? தாங்களெல்லா மறிந்திருக்கின்றீர்கள்; உலகத்தில் செல்வத்தை விரும்பாதவன் அருமை' என்றிப்படியெல்லாஞ் சொல்லக் கேட்டு,

சிங்கம் நகைத்து 'சஞ்சீவகனிடத்தில் எனக்கிருக்கின்ற சிநேகம் போகாது; மித்திரர்கள் அநேக அநியாயம் பண்ணினாலும் அதைப் பிரியமாகவே நினைக்கவேண்டும்' என,

தமனகன் 'இதுதான் புத்திக்குத் தோஷம்; இதனால் உமக் கபாயம் வரும்; சாதுக்கள் புத்தியைக் கேளாமல் துட்டர் புத்தியைக் கேட்கிறவனெவனோ அவன் மருந்து தின்னாத ரோகியைப் போல விபத்தையடைவான். காதுக் கினிமையாயும் இதம் பண்ணுகிறதாயு மிருக்கின்ற வசனந் துர்லபம். காதகனுடைய வசனஞ் செவிக் கினிமையாயினும் அதைக் கேட்கலாகாது' என,

சிங்கம் 'நான் அபயங்கொடுத்து இரட்சித்தவன் எனக்குத் துரோகம்பண்ணுவானோ? என்ன பேச்சுப் பேசுகின்றாய்? போ' என, மறுபடியும்

தமனகன் 'துஷ்டர் குணம் மாறுமா? நாயின்வாலைக் குணக்கெடுக்கலாமா? எட்டிமரத்துக்கு அமுதம் வார்த்து வளர்த்தாலும் அதற்குத் தித்திப்புண்டாகுமா? எப்படியும் பிறர்க்கு இதம் பண்ணுவது சாதுக்களுக்கு முக்கிய தருமம். ஆகையால் தாங்கள் கோபமின்றிருந்தும் இந்த விருத்தாந்தத்தைச் சொன்னேன். இனிமேல் என்மேற் குற்றமில்லை. சிலவேளை ராஜா பாமரர்களுடைய புத்தியைக் கேட்டுச் சங்கடப்படும் போது காரியகாரர்மேற் குற்றஞ் சுமத்துகிறதுண்டு; ஆகையாற் சொன்னேன்' என்றிப்படிச் சொல்லிச் சும்மாவிருந்தது. அதற்கு

சிங்கம் 'இதை நான் சஞ்சீவகனுக்குச் சொல்ல வேண்டும்' என,

தமனகன் 'அவனுக்கு இதைச் சொன்னால் அவன் ஜாக்கிரதைப்பட்டு வேறே ருபாயத்தாற் பொல்லாங்கு தேடுவான். ஆகையால் இதை அவனுடன் சொல்லாதிருப்பதே யோக்கியம். ராஜாவின் மந்திராலோசனை இரகசியமாகவே இருக்கவேண்டும்' என, இதைக் கேட்டு மறுபடியும்

சிங்கம் 'அந்தச் சஞ்சீவகன் விரோதப்பட்டு என்ன செய்யமாட்டுவான்? அவன் சாமாத்திய மெவ்வளவு?' என்று சொல்ல,

நரி 'நாமவனை யறியமாட்டோம்; அவன் பராக்கிரமமும் சுபாவமும் நமக்கெப்படித் தெரியும்? ஒருவன் குணத்தை யறியாம லவனைச் சேர்க்கலாகாது. சேர்த்தாலொரு சீலைப்பேன் மூட்டுப்பூச்சியைச் சேர்த்து நாச மடைந்தாற்போலாகும்' என,

சிங்கம் 'அஃதெப்படிச் சொல்' என,

தமனகன் சொல்லுகின்றது.

ஒரு ராஜாவின் பஞ்சணையில் மந்தவிசர்ப்பணி என்னு மொரு சீலைப்பேன் நெடுநாளாக வாசம்பண்ணிக்கொண்டிருக்கையில் ஒருநாள் அதன் வீட்டுக்கு டிண்டிபன் என்னும் மூட்டைபூச்சி வந்தது. அதைப் பார்த்துச் சீலைப்பேன், 'அப்பா நீ பொல்லாதவன்; முட்களைப்போன்ற பற்களினாலே தூங்குகிறதற்கு முன்னமே துடுக்காய்க் கடிப்பாய்; நீ சமயந் தெரியாதவனாதலால் ராஜசயனத்தி லிருக்கத்தக்கவனல்ல; இவ்விடம்விட் டோடிப்போ' என்று கடுகடுத்துச் சொல்ல, மூட்டை 'நான் அப்படிச் செய்யவில்லை; நீ சொன்னபடியே கேட்பேன்' என்று காலில் விழுந்து பிரார்த்திக்க, சீலைப்பேன் மனதிரங்கி, 'நல்லது, நீ வெடுக்கென்று கடியாமல் நித்திரை செய்யப் பார்த்து மெத்தெனக் கடித்துக் கொஞ்ச ரத்தங் குடித்திரு' என்று சொல்ல அப்போதந்த மூட்டைப்பூச்சி நல்ல தென்றிருந்து பிறகு ராஜா விழித்திருக்கும்போதே சுறுக்கென்று கடிக்க ராஜன் திடுக்கென் றெழுந்திருந்து என்னமோ கடித்த தென்று சோதனைக்காரருடனே சொல்ல, அவர்கள் விளக்கைக்கொண்டு சோதிக்க, மூட்டை கட்டிற் சந்திலொளித்துக்கொண்டது. அதற்கிடங் கொடுத்த சீலைப்பேனகப்பட்டது. அவர்களதனை 'நீயல்லவா எங்க ளிராசனைக்கடித்தாய்?' என்று நசுக்கிக் கொன்றார்கள். ஐயோ! அது வகைதெரியாமலிறந்தது.

௩. சீலைப்பேன் மூட்டைபூச்சிக்கு இடங்கொடுத்து இறந்த கதை.

ஆகையால் ஒருவன் குணத்தைத் தெரிகிறதற்கு முன்னமே அவனுடனே சகவாசம் பண்ணலாகாது' என,

சிங்கம் கேட்டு, அந்தச் சஞ்சீவகனுடைய துஷ்டசுபாவமின்னபடி யென் றெனக்குத் தெரிந்தா லப்போது ஜாக்கிரதையாய் இருப்பேன்' என்று சொல்ல,

தமனகன் 'அந்த எருது உம்மைக் கொல்ல நினைத்துத் தன் கொம்புகளை முன்னிட்டுக்கொண்டு உம்முடைய சந்நிதியிலே வரும்போது தங்களுக்குத் தெரியவரும்' என்று சொல்லிவிட்டு எருதினிடத்திற்குப் போய் அங்கே தன் மனதில் மிகவும் வியசனமிருக்கிறதாகத் தோற்றுவித்தது.

அப்போது சஞ்சீவகன், 'மித்திரா! சுகமா?' என்று கேட்க,

தமனகன் 'சேவகனுக்குச் சுகமெங்கே யிருந்துவரும்? சம்பத்தும் விபத்தும் கூடவே யிருக்கின்றன; ராஜாவுக்குப் பிரியமாய் யாரிருக்கின்றார்கள்? யாசகன் சமமானதை யடைவானோ? இந்தக் காலமெது? தனக்கு மித்திரன் யார்? தன் வலி எவ்வளவென்று எப்போதும் விசாரித்துக்கொண்டிருக்க வேண்டும்' என,

இதைக் கேட்டுச் சஞ்சீவகன் 'இப்படியேன் சொல்லுகின்றாய்?' என,

தமனகன் 'ராஜகாரியத்திலுண்டாகிய வஞ்சகத்தை மற்றொருவரோடு சொல்லலாமோ? ராஜா அறிந்தாற் கொல்லுவான். ஆனாலும் நீ என் நம்பிக்கையாலே சிங்கத்தோடு சிநேகம் பண்ணினதினால் உனக்குச் சொல்லுகின்றேன். அந்தச் சிங்கம் உன்மேல் மிகவுங் கோபங்கொண்டு உன்னைக் கொன்று தன்னுடைய சேனைக்கெல்லாம் நல்ல விருந்திட நினைத்திருக்கின்றது' என்று சொல்லியது.

அதைக் கேட்டவுடனே சஞ்சீவகன் வருத்தத்தோடும் ஆலோசித்துக்கொண்டிருந்தது.

தமனகன், 'வேறே ஆலோசனை யென்ன? யாதொன்று சம்பவித்ததோ அதற்குத் தக்கதாக நடக்கவேண்டும்' என,

சஞ்சீவகன், 'நீ சொன்னதெல்லாஞ் சரிதான். உலகத்திலும் அப்படியே இருக்கின்றது. சாதாரணமாய் ஸ்திரீகள்

துர்ச்சனர்களுக்கு வசமாயிருக்கின்றார்கள்; ராஜாக்கள் துஷ்டர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; துஷ்டனை மிகவுஞ் சிநேகித்தால் அவன் விபரீதமாக நினைக்கின்றான்; குருடனுக்குக் கண்ணாடியைக் காண்பித்தாலும் செவிடன் காதில் உபதேசித்தாலும் அவர்கள் விபரீதமாகவே நினைப்பார்கள்; துஷ்டனும் அப்படியே விபரீதமாக நினைக்கின்றான்; எப்படிச் சந்தனமரம் பாம்போடு கூடியிருக்குமோ, எவ்வாறு தாமரை முட்களோடு கூடியிருக்குமோ அப்படியே பெரும்பாலும் ராஜாக்கள் துஷ்டர்களாற் சூழப்பட்டிருக்கின்றார்கள். ஆகையா லிப்படிப் பட்ட பொல்லாங்கு நமக்கு நேரிட்டது' என்றது.

இதைக்கேட்டுத் தமனகன், 'அந்தச சிங்கத்துக்கு வாய்ப் பேச்சு மாத்திரந் தித்திப்பேயல்லாமல் மனது மிகவுங் கடூரந் தான். பூர்வம் பிரமா கடலைக் கடக்கிறதற்குக் கப்பலை யுண் டாக்கினான். இருட்டைப் போக்கடிக்க விளக்கைச் சிருஷ் டித்தான். யானையை அடக்க அங்குசம் நிருமித்தான். துஷ் டர்களுடைய மனதை அடக்கும்படி யாதொன்றுஞ் செய்யா மற்போனான்' என,

இவையெல்லாங் கேட்டுச் சஞ்சீவகன், பெருமூச்செறிந்து, பெரிய பொல்லாங்கு நேரிட்டது; இதைத் தப்பித்துக் கொள்ள எனக்குச் சாமர்த்தியமில்லை. எமனுடைய வாயில் அகப்பட்டவன் எப்படித் தப்பிப்போவான்? எப்படி யொரு குற்றமுமில்லாத ஒட்டையைக் காக முதலானவை கூடிக் கொலைசெய்தனவோ அப்படியே வஞ்சனை பண்ணுகிற துஷ்டர் கள் ஒருவனிடத்திற் குற்றமில்லாதிருக்கவும் அவனைக் கொலை செய்கின்றார்கள்' என,

'அஃதெப்படி? சொல்லவேண்டும்' என்று! தமனகன் கேட்க, சஞ்சீவகன் சொல்லுகின்றது :—

'ஒரு காட்டில் மதோற்கடன் என்கிற ஒரு சிங்கம்' நரியையும் புலியையும் காக்கையையும் தனக்கு மந்திரிகளாக வைத்துக்கொண்டு அரசாண்டுவருகிற காலத்தில் ஒரு நாள் அந்தக் காட்டில் ஒட்டகமொன்று வழிதப்பிவரக் கண்டு, மந்திரியாகிய காக்கை 'நீ யார்' என்று கேட்க, அந்த ஒட்டகம் 'நான் வழி தப்பி வந்துவிட்டேன்' என்று சொல்ல, அதை இட்டுக்கொண்டுபோய்ச் சிங்கத்தினிடத்தில் விட்டு நடந்த காரியத்தைச் சொல்ல, அதைச் சிங்கங்கேட்டு 'பயப்படாதே நமமுடைய மந்திரிகளுடனே நீயுமொரு மந்திரியாயிரு' என்றதற் கபயங்கொடுத்து, மந்தானகன் என்று பெயரிட்டுத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது.

எ. ஓர் ஒட்டையைக் காக முதலியவை கூடிக் கொன்ற கதை.

இப்படி வெகுகாலஞ் செல்லுகையில் ஒருநாள் சிங்கத்துக்குச் சரீரம் அசௌக்கியமா யிருந்தபடியினால் அம் மூன்றையு மழைப்பித்து 'இன்றைக் கென்னாலிரை சம்பாதிக்கக் கூடாது. நீங்கள்போ யெனக் கேதாவதிரை கொண்டுவர வேண்டும். பிறகு நான் தின்று மிகுந்ததை நீங்கள் தின்னலாம்' என,

இம்மூன்றுஞ் சிங்கத்தின் கட்டளைப்படி அந்தக் காட்டிற் போய் இரை தேடிப்பார்த் தகப்படாமையால் அப்போது தங்களோடு கூடவிருந்த மந்தானகனைத் தூரத்திற் போம்படி ஒரு வேலையிட்டுக் காகம் மற்றை வண்டையும் பார்த்து, 'இன்றைக்கு நாம் மந்தானகனைக் கொல்லுவோம். புல்லுந் தழையுந் தின்னுகிறவனால் நமக்குப் பிரயோஜனமென்ன?' என, மற்றிரண்டும் 'சரிதான் அவனுக்கு நம்முடைய ராஜா அபயங்கொடுத்திருக்கின்றதினால் அவனை நாமெப்படிக் கொல்லலாம்? கூடாது' என, காகம் 'நாம் இன்றைக்குச் சிங்கத்தின் கையால் தப்பாமல் மரண மடைவோம்; பசியெடுத்தால் தாயும் பிள்

ளேயை விட்டுவிடுகின்றான்; பாம்புந் தானிட்ட முட்டைகளைக் குடிக்கின்றது; ஆகையாற் பசியாற் பீடிக்கப்படுகிறவன் எந்தப் பாதகத்தான் பண்ணமாட்டான்? இது உங்களுக்குத் தெரிய

வில்லையா ? என்று சொல்லி உடனே சிங்கத்தண்டைபோய்க் காகம் 'சுவாமி! இன்றைக்கெதுவுங் கிடைக்கவில்லை' என, 'இதற்கென்ன உபாயம் பண்ணலாம்?' என்று சிங்கங் கேட்க, காகம் 'தங்கள் சுவாதீனத்தில் இரையிருக்கையில் வேறே ஆலோசிப்பானேன்? வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடலாமா?' என, சிங்கம 'என்னிடத்தாகார மெங்கே யிருக்கின்றது?' என, காகம் 'மந்தானக னென்னும் ஒட்டை யிருக்கின்றதே' என,

இதைக் கேட்டுச் சிங்கம் பூமியைக் கையாற்றட்டிச் 'சிவ சிவா' எனக் காதின்மேற் கையைவைத்து, 'நான் அவனுக் கபயங்கொடுத்திருக்கையில் நீங்க ளிப்படி விபரீத வார்த்தை சொல்லலாமா? அடைக்கலம புகுந்தவர்களைக் கை விடலாமா? பசு, பூமி, தானிய மிவற்றின் றானத்தைக்காட்டி லும் அபய தான மதிகம். அசுவமேத புண்ணியத்தைக் காட் டிலும் இந்தப் புண்ணிய மதிகமென்று சாஸ்திரமு மிருக்கின் றதே' என,

கேட்டுக் காகம் 'ஐயாவே! என்னொரு விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஒரு குலத்துக்காக ஒருவனை விட்டுவிடலாம்; ஒரு கிராம ரக்ஷணைக்காக ஒரு குடும்பத்தைத் துறக்கலாம்; ஒரு தேச பரிபாலனத்தின்பொருட்டு ஒருகிராமத்தைக் கைவிட லாம்; தன்னிமித்தம் பூமியை விடலாம்; ஆகையால் இது தப்பன்று. ஆகிலும் அவனைத் தாங்கள் கொல்லவேண்டாம். நாங்களே கொல்லுவோம்; இல்லாவிட்டால் அவனே சாக உடன்பட் டென்னைக் கொல்லுங்களென்பான். அப்போது நாங்கள் கொல்லுவோம்' என்று சொல்லச் சிங்கஞ் சும்மா விருந்தது. பிறகு காகம் அதுவே கட்டளையாக நினைத்துக் கொண்டுபோய், மற்றை மூன்றையு மிட்டுக்கொண்டு சிங்கத் தின் கிட்டவந்து, 'சுவாமீ! இன்றைக்கொன்று மாகாரமகப்

படவில்லை; அதனால் நீங்கள் இன்றைக்குப் பட்டினி யிருக்க லாயிற்று; அப்படி யிராமல் என்னைப் புசிக்கலாம்' என,

சிங்கம் 'நீ யெவ்வளவு? உன்னை யுண்டதினா லென்பசி தீருமா? உன்னுடலென் கடைவாய்ப் பல்லுக்குப் போதுமா?' என்று கேட்க,

நரி 'அப்படியானா லென்னைத் தின்னும்' என்று நிற்க,

'நீயு மப்படித்தான், நீ யதிகமல்ல' என்று சிங்கம் மறுக்க,

புலி 'இவ்விருவரினும் நான் பெருத்திருக்கிறதினால் என்னைப் பக்ஷித்துப் பசி தீரும்' என,

சிங்கம் 'நீதா னெனக் கெவ்வளவிரை? உன்னைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கின்றாயோ?' என்று சொல்ல,

ஒட்டக மிதைப் பார்த்து 'சுவாமி! நான் எல்லாரைக் காட்டிலும் பெருத்திருக்கவில்லையா? சித்தமானால் என்னைக் கொல்லலாம்' என,

இதைக் கேட்டவுடனே புலியும் நரியும் பாய்ந்து விழுந்து அந்த க்ஷணமே, ஐயோ! அதைக் கொன்று எல்லாம் புசித்தன.

'ஆகையால் எங்கே பகையுங் கீழ்க ளிருக்குமோ அங்கே சுகமிராது. பிராணனுக்கு நாசம் வருமென்றே நினைக்க வேண்டும்; இவ்விடத்திலு மப்படியேயிருக்கின்றது. துஷ்டர்கள் கையி லகப்பட்டுச் சுகமா யிருக்கிறதைக்காட்டிலும் சண்டை செய்வதே யோக்கியம். ஒருவன் சண்டை முனையிற் செத்தாற் சொர்க்கமடைகின்றான். சத்துருவை ஜயித்தா லிராச்சிய மடைகின்றான். ஆதலாற் சூரர்களுக்குச் சாவும் பிழைப்புஞ் சமானம்' என்றது. அதைக்கேட்டுத் தமனகன் 'பகைவர்களுடைய பராக்கிரமத்தை அறியாமல் எவன் பகைத்துக்கொள்ளுகின்றானோ அவன் சமுத்திரம் சிட்டுக்குருவியினா லெப்படி அவமான மடைந்ததோ அப்படியே அவமானமடை

வான்' என, அப்போது, 'தம்பி! அதெப்படி?' என்று சஞ்சீவகன் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது :—

அ. சமுத்திரம் சிட்டுக் குருவியினால் அவமானமடைந்த கதை.

'சமுத்திரக்கரையில் இரண்டு சிட்டுக்கள் ஆணும் பெண்ணுமாய் ஒரு செடியின்கீழ்க் கூடு கட்டிக்கொண்டிருக்கும்போது, பெட்டை ஆண்பறவையைப் பார்த்து, 'எங்கே முட்டையிடலாம்' என்று கேட்க, ஆண் 'இது நல்லவிடம்' என்று சொல்ல, பெண் 'இந்தக் கடற்கரையில் ஒரு வேளை அபாயம் நேரிடும்' என, ஆண்சிட்டு 'சமுத்திரத்திற்கென்னுடனே பகைத்துக்கொள்ளச் சாமர்த்தியமில்லை' என, பெண் 'உனக்கும் சமுத்திரத்திற்கும் வெகு தாரதம்மியமிருக்கின்றதே; எவன் தன் வலியும் பிறன் வலியும் பார்க்கிறதில்லையோ அவன் விபத்தையடைவான்; எவன் பார்க்கின்றானோ அவன் சுகமடைவான். மேலும் தனக்கு இதம் பண்ணுகிற மித்திரன் பேச்சைக் கேளாதவன் ஆமை எப்படிக் கழியைவிட்டு மரணமடைந்ததோ அப்படியே மரண மடைவான்' என, ஆண் 'அதெப்படி? பெண்ணே! சொல்' எனப் பெட்டைக்குருவி சொல்லுகின்றது.

ii. ஆமை கழியைவிட்டு மரணமடைந்த கதை.

விகட சங்கடங்கள் என்னும் மிரண்டன்னமும் கம்புக்கிரீவன் என்னு மாமையுஞ் சிநேகமா யொருகுளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், அன்னங்கள் இப்போ திங்கே மழை பெய்யாமையால் குளம் வற்றிப்போ மாகையால் இனி வேறொருகுளத்திற் போய்ச் சேர்வது யோக்கியமென்று நினைத்து இதை நம்முடைய சிநேகிதனுக்குச் சொல்ல வேண்டுமென்றுலோசித்து அப்படியே அதற்குச் சொல்லும்போது, கம்புக்கிரீவன் 'நீங்கள் செப்பட்டையினாற் பறந்துபோவீர்கள்; நான் வேறோரிடத்திற் கெப்படிப் போவேன்' என, விகட சங்கடங்

கள் 'எங்கள் வார்த்தையில் நம்பிக்கைவைத்து ஸ்திரமாயிருப் பாயானால் உன்னையுங் கொண்டுபோவோம். கொண்டுபோகை யில் வழியிலெதொன்றும் பேசாமலிருந்தாற் போகக்கூடும்,

என்று சொல்லி, ஒரு கழி கொண்டுவந் தாமையைப் பார்த்து 'இந்தக் கழியைப் பல்லினாலே பலமாய்க் கடித்துப் பிடித்துக் கொள்; விட்டுவிடாதே; நாங்களிருவரு மிதை இருபுறத்திலும் மூக்காற் கௌவிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் போகின்றோம்' என்று சொல்லி அந்தக் கொம்பை இரண்டும் பற்றிக் கொண் டெழும்பிப் பறந்துபோகையில், இதை யொரு பட்டணத்து ஜனங்கள் பார்த்து அதிசயித்து நகைத்து எல்லாரு மொருமிக்க 'இஃதென்ன! ஒரு கழியை இரண்டு பறவைகள் தூக்கிக்கொண்டு அதை ஆமையாற் பிடிப்பித்துக்கொண்டு போகின்றன' என்றிப்படிப் பேரிரைச்சலிட்டுப் பேசினார்கள். அதைக் கேட்டுக் கம்புக்கிரீவன் இந்த இரைச்சல் எங்கிருந்துண்டாகின்றதென்று சொல்வதற்கு வாய் திறந்தவுடனே கழியினின்றும் விடுபட்டுப் பூமியில் விழுந்தது. அப்போது அங்கேயிருந்த புலாற்றின்பவர்கள் உடனே அதைக் கொன்று தின்றார்கள்.

ஆகையால் தனக் கிதம்பண்ணுகின்றவர்கள் போதனை அசட்டைபண்ணலாகாது. மேலும் யாதொரு காரியம் நேரிடுவதற்கு முன்னேதானே ஆலோசிக்கின்றவனும், வருகிற போதே ஆராய்கின்றவனும் சுகமடைவார்கள். இதைவிட்டு யாதொன்று வரத்தக்கதோ அது வரட்டுமென்று யார் சொல்லுகின்றானோ அவன் வந்தபின் காப்போன் என்னும் மீனைப்போல் நாசமடைவான்' என, சேவல் 'அஃதெப்படி' என, பெட்டைச்சிட்டுச் சொல்லுகின்றது:—

iii. மூன்று மீன்களின் கதை.

"ஒரு பெரிய குளத்தில் வருமுன் காப்போன் என்றும், வருங்காற் காப்போனென்றும், வந்தபின் காப்போனென்றும் மூன்று மீன்கள் அநேக நாளாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில் ஒருநாள், வலைஞர் வந்து அதில் தண்ணீர்

கொஞ்சமா யிருக்கின்றதாகையால் நாளைவந்து அதிலிருக்கிற மீன்களை யெல்லாம் பிடிப்போமென்று பேசிக்கொண்டதை வருமுன் காப்போன் கேட்டுத் தன் சிநேகிதரிடத்திற்குப் போய், 'நாமிவ்விடம்விட்டுச் சீக்கிரமாகப் புறப்படவேண்டும்; இனி இங்கே நிமிஷநேரமு மிருக்கலாகாது' என, இதைக் கேட்டு வருங்காற் காப்போன் 'நமக்கு விபத்து வரும்போது பார்த்துக்கொள்ளுவோம்; காரியம் நேரிடும்போது அதற்குத் தக்கதாகப் புத்தியுண்டாகும்' என, பிறகு வந்தபின் காப்போன் 'தன்னிடத்தை விட்டுவிடுகிறதுதான் முடத்தனம். எதுவரத்தக்கதோ அது வாமலே வரும்; யாதொன்று வரத்தகாததோ அதை நாம் வருந்தி யழைத்தாலும் வராது. ஆதலால் நான் வரமாட்டேன்' என்று சொல்லி அந்தக் குளத்திலேயே இருந்தது. பிறகு வருமுன் காப்போன் வேறிடத்துக்குப் போய்விட்டது. மறுநாள் உதயத்திற் செம்படவர் வந்து வலையெறிந்து மீன்களைப் பிடித்தார்கள். அதில் வருங்காற் காப்போன் அகப்பட்டுச் செத்தாற்போற் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து இது செத்ததென் றெண்ணிக்கொண்டு செம்படவன் அதைக் கரைமேற் போட்டுவைத்தான். இதற்குள்ளே அது அவன் கண்ணுக்குத் தப்பித் தண்ணீரிற் புகுந்து ஒளித்துக்கொண்டது. பிறகு வந்தபின் காப்போன் வலைக்குள் அகப்பட் டிப்போதென்ன செய்யலாமென் றங்குமிங்கு மோட, இதைச் செம்படவன் கண்டு தடியாலடித்துக் கொன்றான். மற்றிரண்டுஞ் சுகமடைந்தன.

சமுத்திரஞ்சிட்டுக் குருவியினால் அவமான மடைந்த கதையின் தொடர்ச்சி.

ஆகையா லெதையு மாலோசித்துச் செய்யவேண்டும், என்று சொல்லிப் பிறகு புருஷன் சொற்படி அங்கே தானே முட்டையிட்டது. அப்பொழுது, சமுத்திர மதன் வல்லமையை யறியாமல் முட்டைகளை யடித்துக்கொண்டு

போயிற்று. சிட்டு அதைப்பார்த்து வெகு துக்கமாய்ச் சேவ லுடன், 'சுவாமீ! தங்களுக்குப் பெரிய சங்கடம் வந்தது; முட்டைகளைச் சமுத்திரங் கொண்டுபோயிற்று; இப்போ தென்னசெய்யலாம்?' என, சேவல் 'நீ பயப்ப டாதே, நான் முட்டைகளைக் கொண்டுவருவேன்; என் திரா ணியைப் பார்' என்று சொல்லி எல்லாப் பறவைகளையுங் கூட்டிக்கொண்டு கருடனைச் சரணமடைந்தது. கருடன் அதை விஷ்ணுவுக் கறிவித்து 'அப்பறவை மிகவும் வருத்தப்படுகிற தாகையால் அதன் முட்டைகளைக் கொடுப்பிக்கவேண்டும்' என, விஷ்ணு சமுத்திரத்தைப் பார்த்து, 'அதன் முட்டை களைச் சீக்கிரமாய்க் கொடு' என்று கட்டளையிட்டவுடனே, சமுத்திரம் முட்டைகளைக் கொண்டுவந்து கொடுத்தது.

—o—

7. சஞ்சீவகன் சிங்கத்திேனாடு போர்செய்திறத்தல்.

ஆகையால் சத்துருக்களுடைய பராக்கிரம மறியாமற் பகைத்துக் கொள்ளலாகாது. அந்தச சிங்கத்திற் ககங்காரத் தினால் தெரியவில்லை' எனக் கேட்டு,

சஞ்சீவகன் தமனகனைப் பார்த்து, 'நல்லது அந்தச் சிங்கத்தின் சண்டைக்குறிப்பு எப்படியிருக்குஞ் சொல்' என,

தமனகன் 'எப்போது அவன் காதுகளை நெறித்துக் கொண்டு வாலைத் தூக்குவானோ அப்போது கொல்ல நினைத் தானென் றறியவேண்டும். அக்காலத்தில் அப்படியே நீயு மவனுக்கு முன்னே யிருக்கவேண்டும். சுத்த வீரனாகிய உனக் குத் தெரியாதா? எல்லாந் தெரிந்தவர்களுக்குச் சொல்வா னேன்?' எனச் சொல்லிவிட்டுத் தமனகன் மறுபடி கரடகனி டத்திற்குப் போயிற்று. அப்போது கரடகன் 'என்னவா யிற்றுச் சொல்' எனத் தமனகன் காரிய முடிந்தது: இருவரு டைய சிநேகத்தின் வாயிலும் மண் விழுந்தது. இப்போது

நான் சிங்கத்தின் கோபக்குறி இப்படி யிருக்குமென்று சஞ்சீவகனுக்குச் சொன்னபடியே செய்விக்கின்றேனென்று பிங்களனிடத்திற்குப்போய் அப்படியே அதைச் செய்வித்தது.

பிறகு சஞ்சீவகன் சிங்கமிருக்கு மிடத்திற்குவந்து பார்க்கும்போது, தனக்குத் தமனகன் முன் சொன்னபடியே யிருக்கக்கண்டு, மிகவும் விசனமடைந்து, 'பராக்கிரமத்தினாலேயே பிராணனை விடவேண்டும,' என்று நிச்சயித்து யுத்தத்திற்காரம்பிக்கவே இரண்டிக்கும் பெரிய சண்டை விளைந்தது.

கரடகன் அதைப் பார்த்து, " தமனகா! துஷ்டா! உன் சேர்க்கையால் ராஜாவுக்குஞ் சிநேகனுக்குஞ் சண்டையுண்டாயிற்று. ராஜநீதியிற் சாமபேத தானதண்டமென்னும் நான்குபாயங்க ளிருக்கின்றன. அவைகளிற் சாமமென்னும் உபாயம் முக்கியமானது. அதனாற் காரியசித்தி யுண்டாகிறதுபோல மற்றவைகளா லுண்டாகாது. பகையிருந்தாலும் சாமவுபாயத்தாலேயே போம். இப்படியிருக்கையில் நீ ராஜாவைப் பெரிய பொல்லாப்பில் விழுவித்தாய். ராஜாக்களிற் சிலர் சனங்களுடைய புத்தியைக் கேட்டுச் சங்கடமடைகின்றார்கள். ஆகையாற் குணவந்தர்களுடைய கூட்டுறவு ராஜாக்களுக்கிருக்கவேண்டும். கபடியாக விருக்கின்ற பிரதானி புத்திசாலியானாலும் அவன் ஒருபோதும் ராஜாவண்டையி லிருக்கலாகாது. மேலும் தானே சம்பத்தை யடையவேண்டுமென்று நினைத்து ராஜாவினிடத்தில் வேறொருவன் சேரலாகாதென் றிச்சிக்கிறவனும், ராஜாவுக்கு உபயோகியாகான். பலபெயர் சமர்த்தர்கள் ராஜாவினிடத்திலிருந்தால், ராஜா பிரகாசிப்பான். ஆசைக்காரருந் துஷ்டருமாகிய இவர்களுடைய கூட்டுறவால் ராஜா பிரகாசிக்கமாட்டான். தன்னைவிட ராஜாவினிடத்தில் வேறொருவ னிருக்கலாகாதென்று யார் இச்சிக்கின்றானோ அவனை ராஜாவுக்குச் சத்துருவென்று நினைக்கவேண்டும். அப்படியே

நீ இந்தத் தீங்கு விளைத்தாய். எஜமானனுடைய தயை கிடைத்தால் சேவகர்கள் கர்வங்கொள்ளாமல் மிகவும் அடக்கமாக இருக்கவேண்டும். நீ அதைவிட்டு விபரீதமாக நடக்கின்றாய். 'பிதாவைப்போ லிருப்பான் புத்திரன்' என்பதை நீ பொய்யாக்கினாய். இப்போது உனக்கு நானென்ன சொல்வேன்? கொக்குக் குரங்குக் குபதேசம்பண்ணி யெப்படி இறந்ததோ அப்படி உன்னாலே நான் மரணமடைவேனென் றெனக்குத் தோன்றுகின்றது,'' என் றிப்படிக் கரடகன் சொன்னதைக் கேட்டுத் தமனகன், 'அஃதெப்படி? சொல்,' என, கரடகன் சொல்லுகின்றது.

௯. கொக்குக் குரங்குக் குபதேசம்பண்ணி இறந்த கதை.

'ஒருநாள் குளிரால் வருத்தப்படுகிற குரங்குக் கூட்டம் மின்னும் பூச்சிக் கூட்டத்தைப் பார்த்து இது நெருப்பென்று நினைத்துக் குளிர்காய்வதற்காக அதனருகே போயிற்று. அப்போ தங்கே ஒரு மரத்தின் மேலிருந்த சுமுகன் என்னு மொரு பறவை இதைப் பார்த்துக் குரங்கினருகே வந்து, 'இது மின்மினிப்பூச்சி, நெருப்பன்று,' என்று சொன்னவுடனே குரங்குக் கூட்டத்தி லொன்று கோபித்து அந்தப் பக்ஷியைப் பிடித்து, 'நீ யெனக்குப் புத்தி சொல்லுகிறவனோ?' என்று கல்லிலறைந்து கொன்றது. ஆகையால் துஷ்டர்களுக் குபதேசம் பண்ணலாகாது,' என்று கரடகன் சொல்ல.

தமனகன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்து, மனத்தில் மிகவும் விசனப்பட்டு, 'நான் இந்தப் பாதகம் பண்ணினேன்,' என்று சொல்ல,

மறுபடியும் கரடகன், 'அடா, தமனகா! இப்படிப்பட்ட நடக்கையினாலே துஷ்டபுத்தியைப்போல நீயும் நாசமடைவாய்,' என,

அப்போது தமனகன், 'துஷ்டபுத்தி எப்படிக் கெட்டான்? சொல்,' என, கரடகன் சொல்லத்தொடங்கிற்று.

'துஷ்டபுத்தி, சுபுத்தி என்றிரண்டு செட்டிப் பிள்ளைகள் பணஞ் சம்பாதிப்பதற்காகத் தேசாந்தரம் போனார்கள். அவ்விடத்திற் சுபுத்திக்குப் பூமியில் ஒரு பணப்புதையல் அகப்பட்டது. அதைச் சிநேகத்தினாலே துஷ்டபுத்திக்கு உடனே சொல்லத் துஷ்டபுத்தி, 'அந்தத் திரவியத்தை அங்கேயே புதைத்துவிட்டுக் கொஞ்சம பணமெடுத்துக்கொண்டு போவோம்,' என, சுபுத்தி சிநேகத்தினால் அதற்குச் சம்மதித்துப்பிறகு அதிற் கொஞ்சம் பணமெடுத்துக் கொண்டு மற்றப் பணத்தை ஒருமரத்தடியிற் பள்ளந்தோண்டி அதிலே புதைத்து வைத்துப் பின்பு வீட்டுக்குப போய்ப பழையபடி சிநேகமாகயிருக்கையில் ஒருநாள் துஷ்டபுத்தி தனியேபோய் அந்தப் பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான்.

௧௦. துஷ்ட புத்தி தன் தீச் செயலால் நாசம் அடைந்த கதை.

சிலநாட் கழித்துத் துஷ்டபுத்தி சுபுத்தியைப் பார்த்து, 'நாம் போய் நம்முடைய அந்தத் திரவியத்தைக் கொண்டுவருவோம்,' என, இருவரும்போய் அந்த விடத்திற் பார்க்குமளவில் அங்கொன்றும் இல்லாமையால் துஷ்டபுத்தி மிகவும் வருத்தத்தோடு சுபுத்தியைப் பார்த்து, 'இங்கிருந்த பணத்தை நீயே கொண்டு போனாய்; மேலுங் கபடமாய் வருத்தப்படுகின்றாய்,' என்று சொல்லிக் கலக்கப்பட்டு இதை ராஜாவுக் கறிவித்தான்.

ராஜா நியாயாதிபதியை அழைப்பித்து, 'இதைப்பஞ்சாயத்தில் தீர்க்கவேண்டும்,' எனக்கட்டளையிட, அவன், 'ஐந்துநாளைக்குள்ளே தீர்த்துப்போடுகிறேன்,' என்று ராஜாவின் முன்னே கெடு வைத்துக்கொண்டுவந்து பஞ்சாயத்துக் காரம்பித்தான். அப்போது துஷ்டபுத்தி, 'எனக்குச் சாக்ஷியிருக்கின்றது; அந்

தச் சாக்ஷியை இப்போதே கேட்கலாம்,' என, பஞ்சாயத்தார், 'உன் சாக்ஷியைக் கொண்டுவா,' என, துஷ்டபுத்தி வீட்டுக்குப் போய்த் தன் தகப்பனுடனே சொல்லுகின்றான், 'அப்பா! உன்னுடைய ஒரு பேச்சால எனக்குப் பதினாயிரம வராகன கிடைக்கும்,' என, கிழவன், 'எப்படிக் கிடைக்குஞ் சொல்,' என, துஷ்டபுத்தி, 'நீ மரப்பொந்தில் இராத்திரிக்குப் போய் உட்கார்ந்திருக்கவேண்டும்; அங்கே நியாயாதிபதி முதலானோர் வந்து அங்கிருந்த பணத்தை யார் கொண்டுபோனார்களென்னும்போது நீசுபுத்தி கொண்டுபோனானென்றாற் காரியமாகும்,' என, இதைக்கேட்டுப் பிதா 'பொல்லாங்கு நேரிடுகிற காரியத்தைப் பண்ணிச் சுகமடைய வேண்டுமென்றிச்சிக்கிறது கொக்கைப்போல் மூடத்தனமாயிருக்கின்றது,' என,

துஷ்டபுத்தி, 'அஃதெப்படி?' என, பிதா சொல்லுகின்றான்.

iv. ஒரு கொக்குத் தன் மூடச் செயலால் நாசம் அடைந்த கதை.

தான் பொரிக்கின்ற குஞ்சுகளையெல்லாம் ஒருபாம்பு தின்னப் பறிகொடுத்துக்கொண்டு வருகிற ஒரு மூடக்கொக்கு அப்போது பொரித்த தன் குஞ்சுகளைக் காப்பாற்றுகிறதைக் குறித்து என்ன செய்யலாமென்று பெண்கொக்கோடு கூட ஏரிக்கரையிலுட்கார்ந்து ஆலோசித்துக்கொண்டிருக்கையில் அக்கொக்கின் சிநேகனாகிய குளிரன் என்னும் பெயரையுடைய நண்டானது கொக்குகளைப் பார்த்து, 'இன்றைக்கு நீங்கள் ஏன் வியாகூலமாயிருக்கின்றீர்கள்,' என அவைகள் தங்கள் விருத்தாந்தமெல்லாஞ் சொல்லக் குளிரன் அதைக்கேட்டு ஆண் கொக்கைப் பார்த்து, 'நல்லது உனக்குப் பாம்பைக் கொல்லுகிற உபாயமொன்று சொல்லுகின்றேன். கீரிப்பிள்ளையின் வளை முதற்கொண்டு பாம்பிருக்கு மிடமட்டும் மீன்களை யிறைத்துவைத்தாற் காரியஞ் சித்தியாகும்,' என்றது.

கொக்கு அப்படியே செய்யக் கீரிப்பிள்ளை தன் வளையினின்றும் புறப்பட்டு மீன்களைத் தின்றுகொண்டே போய்ப் பாம்பையுங் கடித்துக்கொன்றுவிட்டுக் கொக்கின் குஞ்சுகளையுஞ் சாப்பிட்டது.

'ஆகையால் இப்படிப்பட்ட ஆலோசனை பண்ணலாகாது,' என, துஷ்டபுத்தி பிதா சொன்னதைக் கேளாமல் அவனை வலுவில் இழுத்துக்கொண்டு வந்து, மரப்பொந்தில் உட்காருவித்து, விடியற்காலத்தில் நியாயாதிபதி முதலான பேரையுஞ் சுபுத்தி முதலானோரையும் அவ்விடத்திற் கிட்டுக்கொண்டுபோய், 'சாட்சி இந்த மரத்தைக் கேளுங்கள்,' என்றான். அப்போதந்த மரத்திலிருந்து 'இங்கிருந்த பணமுழுதுஞ் சுபுத்தியே கொண்டுபோனான்,' என்றொரு சத்தம் புறப்பட்டது. சுபுத்தி, 'இதென்ன மோசமாயிருக்கின்றது? இங்கே ஒரு பிராணியுமில்லாமல் தொனி எங்கேயிருந்து புறப்பட்டது? இது தெய்வீகமாக விருந்தால் மெய்யல்லவோ சொல்லவேண்டும்,' என்று இப்படித் தனக்குள் எண்ணமிட்டுக்கொண்டு அந்த மரத்தின்மேலேறிச் சோதிக்கையில் அதிலொரு பொந்து காணப்பட்டது. உடனே இங்கே கிருத்திரமம் இருக்குமென்றெண்ணி அங்கே நெருப்பை மூட்டிப் பற்றுவித்தான். உள்ளேயிருந்த கிழவன் பாதி வேகிறமட்டும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்து, பொறுக்கமுடியாமல் அலறிக்கொண்டு வெளியே வந்து விழுந்தான். அப்போது அங்கிருந்தோரெல்லோரும், 'இதென்ன! இதென்ன!' எனக் கேட்கக் கிழவன், 'என் பிள்ளை துஷ்டபுத்தி கபடத்தினால் என்னைப் பலாத்காரமாகக் கொண்டுவந்து இங்கே வைத்தான்,' என்று சொல்லி இறந்து போனான். நியாயாதிபதி இதைப் பார்த்து, ராஜாவுக்கு விண்ணப்பம் பண்ண, பிறகு துஷ்டபுத்தி வாயினாலேயே ராஜா

துஷ்டபுத்தியின் கதைத்தொடர்ச்சி.

எல்லாரு மறிந்துகொண்டு அவனைக் கழுவி லேற்றினான்,' என்று சொல்லிப் பின்னுங் கரடகன் தமனகனைப் பார்த்து, 'பாம்பை வெகுநாள் வளர்த்தாலும் அதெப்படியும் வளர்த்தவனையே கடிக்கும்; ஆகையால் எனக்குன்னிடத்திற் பயம் தோன்று கின்றது. இனிமேல் உன்னிடத்தில் தேவதத்தனைப்போல் நடந்துகொள்ளவேண்டும்,' என,

அதைக்கேட்டுத் தமனகன், 'தேவதத்தன் எப்படி நடந்து கொண்டான்,' என, கரடகன் சொல்லுகின்றது.

௧௧. தேவதத்தன் தான் கொடுத்த இருப்புக் கம்பிகளை இல்லை என்ற சிநேகனை உபாயத்தால் வென்ற கதை.

'ஒரு பட்டணத்தில் தேவதத்தன் என்னு மொரு சாவ காரி தான் திரவியவீனனாய்ப் போனதினால் மறுபடி திரவியந் சம்பாதிக்க நினைத்துத் தேசாந்தரம் போகப் புறப்படும்போது, தன் வசத்திலிருந்த ஆயிரம் இருப்புக் கம்பிகளை அவ்விடத்திலிருந்த தன் சிநேகிதனிடத்தில் வைத்துவிட்டுப் போனான். போனவிடத்தில் திரவிய சம்பாத்தியத்தைக் குறித்து அநேக உபாயம் பண்ணியும், பண மகப்படாமையால் மீண்டும் வீட்டுக்கு வந்து தன்னுடைய இருப்புக்கம்பிகளைக் கேட்டான். வைத்துக்கொண்ட சிநே கிதன் மிகுந்த துராசையினால் ' 'இருப்புக்கம்பிகளை எலிகள் தின்றுவிட்டன,' என்றான். இவனிந்த அபூர்வத்தைக் கேட்டு நல்லது இருக்கட்டுமென்று சொல்லி வீட்டுக்குப் போய்விட் டான். பிறகொருநாள் சிநேகிதன் பிள்ளையை விளையாடுகிற தற்காக அவனிடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய் மற் றொரு வீட்டி லொளித்துவிட்டுப் பின்பு சிநேகிதனிடத்தில் வந்து உட்கார்ந்தான். அவன், 'உன்னிடத்திலிருந்த என் பிள்ளை எங்கே?' என, சாவகாரி, 'உன் பிள்ளையைப் பறவை தூக்கிக் கொண்டு போயிற்று,' என்றான். இதை அவன் கேட்டு மிகவுங் கிலேசப்பட்டு இவனை இழுத்துக்கொண்டு ஊரதிகாரி

யண்டைபோய், 'இந்தத் துஷ்டன் என் பிள்ளையைக் கொண்டு போய் ஒளித்து வைத்துவிட்டுப் பிள்ளையைப் பட்சி எடுத்துக் கொண்டு போயிற்று என்கிறான்; என் பிள்ளையை எனக்குக் கொடுப்பிக்கவேண்டும்,' என, அதிகாரி இதைக் கேட்டுச் சாவகாரியை அழைத்து, 'இவன் பிள்ளை எங்கே யிருக்கிறது சொல்,' என, அவன் இவன் பிள்ளையைப் பட்சி கொண்டு போயிற்று,' என, அதிகாரி இதைக் கேட்டுக் குலுங்க நகைத்து, 'இந்த அசம்பவம் இதுவரைக்கும் உலகத்திலில்லை; அப்படியிருக்க, நீ எப்படிச் சொல்லுகின்றாய்?' என, அப்போது அவன், 'இது ஓர் ஆச்சரியமா? எப்படி இருப்புக் கம்பிகளை எலிகள் தின்றுவிட்டனவோ அப்படியே அதுவுஞ் சம்பவித்தது ஆண்டவனே,' என, இதைக் கேட்டு நியாயாதிபதி முன்னடந்தவைகளை விசாரித் தறிந்துகொண்டு, 'அவனுடைய இரும்புக்கம்பிகளை நீ கொண்டுவந்து கொடுத்தால் அவன் உன் பிள்ளையைக் கொண்டுவந்து கொடுப்பான்,' என்றவுடனே அவ்விருவரு மப்படியே செய்து தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.

என்று இப்படிப்பட்ட கதைகளைச் சொல்லிப் பின்னுந் தமனகனுக்குக் கரடகன், 'சொன்ன பொருளைத் தெரிந்துகொள்ளாதவன் கல்லுக்குச் சமானம்; அவனுக் குபதேசித்துப் பலனில்லை,' என்று சொல்லிற்று.

கரடக தமனக நரிகளிரண்டும் பிங்களனிடத்திற்குப் போயின. அப்போது சிங்கம் சஞ்சீவகனோடு கூடச்சண்டை பண்ணி அதைக் கொன்றுவிட்டு விசனமா யுட்கார்ந்திருந்தது. இதைக் கண்டு தமனகன் ராஜாவைப் பார்த்து, "சுவாமீ! தாங்கள் சத்துருவைக் கொன்று துக்கப்படுகின்றீர்கள்; இது நியாயமல்லவே; சத்துருவைக் கொல்லவேண்டுமென்று சாஸ்திர மிருக்கின்றது. பிதாவானாலும் பந்துவானாலும், புத்திரனானாலும், மித்திரனானாலும் இவர்களில் யார் தன்னைக் கொல்

லப் பிரவர்த்திக்கின்றானோ அவனை ராஜா கொல்லவேண்டும்; துஷ்ட சிநேகிதனும், விபரீத சேவகனும், அசாக்கிரதையான மந்திரியும், நன்றியறியாதவனும் இருக்கலாகாது. மேலும் மெய், பொய், கடுமை, மென்மை, கொலை, தயை, உதாரத்துவம், உலோபத்துவம், பலவழியாகத் திரவியஞ் சம்பாதித்தல், வெகு பெயருடைய சிநேகம் இப்படிப்பட்ட பல குணங்கள் ராஜாவுக்கிருக்க வேண்டுமென்று ராஜ நீதியிலிருக்கின்றது; அப்படியே தாங்களிது செய்தீர்கள்" என்று சொல்லித் தமனகன் சிங்கத்தைச் சந்தோஷிப்பித்தது. பிறகு சிங்கம் அந்தக் காட்டில் முன்போலத் தன் ராஜ்யத்தை அனுபவித்துக்கொண்டு சுகமாயிருந்தது.